கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

பக்கம் 03 கிறிஸ்து அரசர் பெருவிழா
பக்கம் 8 விசுவாசத்தின் ஒளி
பக்கம் 13 நம்பிக்கை மன்றாட்டு



கிறிஸ்து அரசர் பெருவிழா கார்த்திகை – 24

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05

17.11.2013 - (17 கார்த்திகை, 2013 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 04, கதிர் - 75 16 பக்கங்கள் ரூபா: 25.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : GO / GD / 53 / NEWS / 2013

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தில் மரியன்னையின் ஆண்டு பிரகடனம் – 24.11.2013



- திருவிவிலியத்திலும், திருச்சபையின் படிப்பினைகளிலும் மரியாளின் இடம், மரியன்னைக்கான பக்தி முயற்சிகள் பற்றிய விரிவான மறைக்கல்விக்கான அழைப்பு.
- பாடசாலைகளில் சிறுவர் மரியாயின் சேனை, இளம் கிறிஸ்தவ மாணவர் சங்கம், செபமாலை சபைகளை நிறுவுவதற்கான வழிகாட்டல்.
- திருச்சபையின் மரியியல் தொடர்பான விவிலிய மற்றும் இறையியல் அடிப்படைகளை விளக்குவதற்கு வகுப்புகள், கருத்தரங்குகளை இறையியல் கல்லூரி மற்றும் விவிலிய ஆணைக்குழு ஒழுங்கு செய்தல்.
- தேவத்தை, மடு, லூர்து போன்ற திருத்தலங்களுக்கான திருயாத்திரை மேற்கொள்ள வேண்டுகோள்.
- எல்லாக் குடும்பங்களில் மீண்டும் குடும்ப செபமாலையின் சத்தம் ஒலிக்க வேண்டும்.
- துண்டுப் பிரசுரங்கள் மட்டுமல்லாமல் CD, DVD குறுநாடகங்கள் இணையத்தள வசதிகள் மேலும் பயன்படுத்தப்படல்.

**புனித தொமினிக் முனிவருக்கு அன்னை அவர்கள் செபமாலையை தற்போது இருக்கும் விதத்தில் கொடுத்ததன் எண்ணூறாவது ஆண்டு விழாவும் 2014இல் இடம் பெற இருப்பதால் இந்த மரியன்னை ஆண்டை நல்ல முறையில் பயன்படுத்தி, மரியாயின் ஆன்மீகத்தில் நாம் வளர்ந்து வாழ மரியன்னை ஊடாக இயேசுவிடம் செல்ல திடச் சந்தர்ப்பம் கூறுவோம்.**

## வாழ்த்துகின்றோம்



எமது பேராயர் அதிமேதகு கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை தனது பெயர் கொண்ட தினத்தையும், பிறந்த நாளையும் கார்த்திகை 15ஆம் திகதி கொண்டாடுகின்றார். இவரை ஞான ஒளி குடும்பமும், கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தை சார்ந்த உறுப்பினர்களும் பிறந்த நாள் வாழ்த்துக்களை தெரிவித்து செபித்து நிற்கின்றோம்.

## நன்றி நவில்கின்றோம்



இதுவரை காலமும் இலங்கையில் திருத்தந்தையின் பிரதிநிதியாக இருந்த அதிமேதகு பேராயர் ஜோசப் ஸ்பிட்டரி ஆண்டகை ஆபிரிக்காவில் உள்ள ஐவரிகோஸ் நாட்டுக்கு புதிய பிரதிநிதியாக செல்ல இருக்கிறார்.

இவர் இலங்கையில் தான் முதன் முதலாக திருத்தந்தையின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இதுவரை காலமும் இலங்கையில் அவர் ஆற்றிய பணிகளுக்காக நன்றி கூறுவதோடு அவருடைய தற்போதைய பணி சிறக்க செபித்து வாழ்த்துகின்றோம். மார்கழி மாதம் 02ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10.00 மணிக்கு பொரள்ளை சகல புனித வாளர் ஆலயத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படுகின்றது.

## 23 வது பொதுநலவாய மாநாடு 2013

கார்த்திகை 15 – 17




பொதுநலவாய மாநாட்டின் மூலம் எமது நாடு வரலாற்றில் தடம்பதிப்பதற்கு வாழ்த்துக்கள்

## அடுத்த மூன்று இளையோர் தினங்களுக்கான தலைப்புகள்



2016ஆம் ஆண்டு ஆடி மாதம் போலந்தின் கிரோக்கோவில் சிறப்பிக்கப்படும் 31வது உலக இளையோர் தினத்துக்கான மூன்றாண்டுகள் ஆன்மீகத் தயாரிப்பாக, அடுத்த மூன்று உலக இளையோர் தினங்களுக்கான தலைப்புகளை அறிவித்தார் திருத்தந்தை பிரான்சிஸ். 2014ஆம் ஆண்டு சிறப்பிக்கப்படும் 29வது உலக இளையோர் தினத்திற்கு "ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது" (மத் 5,3), 2015ஆம் ஆண்டு 30வது உலக இளையோர் தினத்திற்கு...

**தொடர்ச்சி 15ம் பக்கம்**

## விசுவாச உயிரூட்டல் தூதுப் பணி

விசுவாச உயிரூட்டல் தூதுப்பணியின் தமிழ் பிரிவால் எல்லாப் பங்குகளிலும் சிறிய குழுக்களுக்கான பக்தி சபைகள், பங்குசபைகள், உயிரூட்டல் நிகழ்ச்சிகள் இடம்பெற்ற வண்ணமாக இருப்பதால், உங்களுடைய பங்குகளிலும் விசுவாச உயிரூட்டல் தூதுப்பணி இடம்பெற விரும்பினால் முன்கூட்டியே அருட்தந்தை உதயதாஸ் அடிகளாரோடு தொடர்புகொண்டு உங்கள் பங்குகளிலும் ஒழுங்கு செய்யும்மாறு கேட்டுக்கொள்கின்றோம்

**விசுவாச உயிரூட்டல் தூதுப் பணி**

## இறைபதம் அடைந்தார்



அருட்தந்தை பேற்றம் தபரேரா அடிகள் 10.11.2013 ஞாயிற்றுக் கிழமையன்று இறைபதம் அடைந்தார். இவரது பூதவுடல் கொழும்பு உயர் மறைமாவட்ட திருஇருதய நாதர் சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்க-ப்பட்டு பிற்பகல் 3.00 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. அதன்பின் அவரது முயற்சியால் நிர்மாணிக்கப்பட்ட மாளிகாவத்தை சமாதான இராக்கினி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, 12.11.2013 அன்று மாளிகாவத்தை ஆலய வளாகத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இவர் கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் இல்லத்தின் முன்னாள் பொருளாளராகவும், கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனராகவும், பொரள்ளை சகல புனிதர்கள் ஆலயம் மற்றும், மாளிகாவத்தை சமாதான இராக்கினி ஆலயத்தின் பங்குத்தந்தையாகவும் பணியாற்றியுள்ளார். இவரது ஆன்மா இறைவனில் இளைப்பாற செபிக்கின்றோம்.

## இறைபதம் அடைந்தார்



குருநாகல் மறைமாவட்டத்தின் முன்னாள் குருமுதல்வர் அருட்பணி. லூஷன் பர்னாந்து அடிகளார் 09.11.2013 அன்று காலமானார். இவரின் நல்லடக்கம் 11.11.2013 அன்று நடைபெற்றது. இவரின் ஆன்மா இறைவனில் இளைப்பாற செபிக்கின்றோம்.

**மக்களினங்களை ஆண்டவர் நேர்மையுடன் ஆட்சி செய்வார் (திபா : 98)**

# குருக்களுக்கான ஞான ஒடுக்கம் – 05

திகதி : கார்த்திகை 17, ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 22ஆம் திகதி 2013 வரை
இடம் : தியான இல்லம் - தேவத்தை
மறையுரை : அருட்பணி. ஜஸ்டின் சவ்வான் (S.S.S)

**குருக்களின் பெயர்**

1. வண. அருட்பணி. சிறில் காமினி பர்னாந்து
2. அருட்பணி. டி சொய்சா ரொஹான்
3. அருட்பணி. அன்டன் அருனோதய
4. அருட்பணி. அதித்த நிரஞ்சன்
5. அருட்பணி. அத்திடிய சுரான்
6. அருட்பணி. பேற்றம் ரஞ்சித்
7. அருட்பணி. சிசில் ஜோய்
8. அருட்பணி. குரே லக்நாத்
9. அருட்பணி. தசநாயக்க ஷாம்
10. அருட்பணி. தயா தர்ஷன
11. அருட்பணி. தெவ்ஷான் அசங்க
12. அருட்பணி. இயூமால் அன்டன்
13. அருட்பணி. பெர்டினன்டஸ் மார்க்கஸ்
14. அருட்பணி. பர்னாந்து சந்திமா ரொஷான்
15. அருட்பணி. பர்னாந்து தினேஷ்
16. அருட்பணி. பர்னாந்து லின்டன்
17. அருட்பணி. பர்னாந்து சம்பத் ரங்கன
18. அருட்பணி. பொன்சேகா பிரான்சிஸ்
19. அருட்பணி. பொன்சேக்கா மஞ்சுள நிரோஷன்
20. அருட்பணி. குணதிலக்க மகேந்திர
21. அருட்பணி. ஹெட்டியாராச்சி சாந்த சாகர
22. அருட்பணி. ஜயமான்ன விக்டர் புளோரன்சிஸ்
23. அருட்பணி. ஜயானந்த அன்டன்
24. அருட்பணி. ஜயன்த்த நிமால்
25. அருட்பணி. ஜயசாந்த ஆனந்த கிறிஸ்சாந்த
26. அருட்பணி. ஜோசப் பெனடிக்ட்
27. அருட்பணி. ஜூட் டென்சில் லக்ஷ்மன்
28. அருட்பணி. கசுன் இஷார
29. அருட்பணி. லியோ கமிலஸ்
30 அருட்பணி. முத்துகுடாராச்சிகெ பீரிட்லி
31. அருட்பணி. நாகரட்ணம் மனோகுமரன்
32. அருட்பணி. நொயல் சம்பத்
33. அருட்பணி. நோனிஸ் நொயல்
34. அருட்பணி. பீட்டர்ஸ் ஐவன்
35. அருட்பணி. பெரேரா ஜூட் லக்ஷாந்த
36. அருட்பணி. பெரேரா பெற்றிக்
37. அருட்பணி. பெரேரா பிரசன்ன சஞ்சீவ
38. அருட்பணி. பெரேரா டிரோன்
39. அருட்பணி. பெரேரா லலித் பீலிக்ஸ்
40. அருட்பணி. பெரேரா கிஹான் ரிட்லி
41. அருட்பணி. பிரதீப் குமார்
42. அருட்பணி. பிரமீன இஷான்
42. அருட்பணி. பிரசாத் இந்திக்க
43. அருட்பணி. பிரசாத் பெரேரா
44. அருட்பணி. பிரியனால் அசங்க
45. அருட்பணி. ரஞ்சித் டெரி
46. அருட்பணி. றேயாட் பேர்னாட்
48. அருட்பணி. ரொஷான் பிரசாத்
49. அருட்பணி. ரனசிங்க சில்வஸ்டர்
50. அருட்பணி. சுமித் குமார
51. அருட்பணி. டெரன்ஸ் கித்சிறி
52. அருட்பணி. டிரோன் அஜித்
53. அருட்பணி. விஜேசுரிய லெஸ்டர்
54. அருட்பணி. வித்தான ஆனந்த

## புனரமைக்கப்பட்ட புனித பேதுரு, பவுல் பேராலய அபிஷேகமும், திருவிழாவும்






இரத்தினபுரி புனித பேதுரு, பவுல் பேராலயம் புனர -மைக்கப்பட்டு கடந்த 09.11.2013 சனிக்கிழமையன்று அபிஷேகம் செய்து, இரத்தினபுரி ஆயர் மேதகு கிளிட்டஸ் சந்ரசிறி பெரேரா (O.S.B) ஆண்டகையால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை, காலி மறைமாவட்ட ஆயர் மேதகு றேமன் விக்ரமசிங்க ஆண்டகையுடன், புனித ஆசீர்வாதப்பர் சபையின் முதல்வர் அருட்பணி மைக்கல் கெலி அடிகளாரும், பொதுமக்களும் கலந்து சிறப்பித்தனர்.

தொடர்ச்சி 15ம் பக்கம்

## நல்லாயன் கன்னியர் சபை
### இலங்கை / பாகிஸ்தான் மாகாணத்தின் புதிய மாகாண தலைவி



நல்லாயன் கன்னியர் சபை, இலங்கை / பாகிஸ்தான் மாகாணத்தின் 18வது மாகாண பேரவையானது 2013 கார்த்திகை, 1ஆம் திகதி - 9ஆம் திகதி வரை நடைப் பெற்றது. இப் பேரவையின் மையக்கருத்து ***'பிரகாசிக்கும் இரக்கத்துடன் பிரபஞ்சத்தில் தீ மூட்டுங்கள்'***

இப் பேரவையானது நல்லாயன் மாகாண தலைமை இல்லம், நாயக்ககந்தை வத்த -ளையில் நல்லாயன் கன்னியர் சபையின் தலைவி அருட்சகோதரி பிறிஜட் லோலர் அவர்களின் ஆலோசனையாளர்களான அருட்சகோதரி சூசன் சியா (நல்லாயன் அப்போஸ்தலிக்க சபை இணை ஆலோசகர்), அருட்சகோதரி திரேசா போமா (நல்லாயன் தியான சபையின் இணை ஆலோசகர்) அவர்களுடைய தலைமையிலே நடைபெற்றது. நல்லாயன் கன்னியர் சபை இலங்கை பாகிஸ்தான் மாகாணத்தின் புதிய மாகாண தலைவியாக அருட்சகோதரி பிரான்சிஸ் முத்துகல அவர்கள் தெரிவு செய்யப்பட்டார்.

அருட்சகோதரிகளான அனிற்றா பர்னாந்து, பிறிஸ்கா பெரேரா, செலின்ரா பர்னாந்து, மாரி யூப்பிரசியா அந்தோனிப்பிள்ளை என்பவர்கள் அப்போஸ்தலிக்க ஆலோசனையாளர்களாகவும், அருட்சகோதரி பெற்றிசியா பெரேரா நல்லாயன் தியான சபை ஆலோசகராகவும் தெரிவு செய்யபட்டார்கள். இரண்டு ஆலோசனையாளர்கள் அப்போஸ்தலிக்க சபைக்கும் ஒரு ஆலோசனையாளர் தியான சபைக்கும் புதிய தலைமை குழுவினரால் நியமிக்கப்படுவார்கள்.

இத் தலைமைக் குழுவானது அடுத்து வரும் 6 வருடங்களுக்கு பணியாற்றும் என்பதையும், அவர்களின் பணிக்காலம் 2014ஆம் மாசி 2ம் திகதி முதல் ஆரம்பமாகும். என்பதையும் மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

**தகவல்**

**நல்லாயன் சபை சகோதரிகள் (நாயக்ககந்த)**



பலகல பங்குத்தந்தை ஜூட் ராஜ் அடிகளாரின் ஊக்குவிப்பின்பேரில், கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் கிழக்குப் பிராந்திய குருமுதல் அருட்பணி. சிறில் காமினி அடிகளரின் வசன அமைப்பில், கலைப்பீட மாணவியான திலினி தரங்கா அவர்களால் பயிற்றப்பட்டு பலகல பங்கை சார்ந்த மாணவ மாணவிகள் “அப்பே தருவோ” என்னும் தலைப்பில் நடன நிகழ்வொன்று மேடையேற்றப்பட்டது. அந்நிகழ்வின் ஒரு பகுதியை படத்தில் காணலாம்.

படம் மற்றும் தகவல் : திலின அலஹகோன்

## அன்பினால் அரவணைத்த திருத்தந்தை



திருத்தந்தையுடன் விசுவாச ஆண்டடை கொண்டாட உலகின் பல பாகங்களிலுமிருந்து வத்திக்கான் நகருக்கு கத்தோலிக்க குடும்பங்கள் சென்ற வாரம் ஒன்றுகூடினர்.

அன்றைய தினம் திருத்தந்தை உரையாற்றிய மேடையருகில் குழந்தைகளை வந்து அமருமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது 80 நாடுகளை பிரதிநிதித்துவப் படுத்த வந்திருந்த குடும்பங்கள் தமது குடும்ப வாழ்வு பற்றி அவருடன் கருத்துப் பகிர்ந்துகொண்டனர்.

அப்போது 6 வயது மதிக்கத்தக்க சிறுவன் ஒருவன் மேடைக்கு வந்து திருத்தந்தைக்கு தனது வாழ்த்துக்களை தெரிவித்தான். பின் திருத்தந்தையருகில் சென்று அவர் கழுத்தில் அணிந்திருந்த திருச்சிலுவையை முத்தமிட்டான். திருத்தந்தை அவனது தலையை வருடி விட்டபோதிருலும் கூட அவன் தனது இருப்பிடத்திற்கு செல்ல விரும்பவில்லை. திருத்தந்தை உரையாட செல்கையில் அவன் திருத்தந்தையின் ஆசனத்தில் அமர்ந்துகொண்டான். அங்கிருந்த கர்தினால்மார்கள் அச்சிறுவனை அங்கிருந்து அகற்ற எத்தனித்தபோதும் அது பலனளிக்கவில்லை. அவர் உரை நிகழ்த்தும் வரையிலும் அச்சிறுவன் திருத்தந்தைக்கு அருகில் நின்று கொண்டேயிருந்தான்.

**அச்சிறுவனையும், திருத்தந்தையையும் படத்தில் காணலாம்.**

ஞான ஒளி
GNANA OLI

கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல 0112695984,0114899611 பெக்ஸ் 0112692586,
மின்னஞ்சல் முகவரி cgnanaoli@yahoo.com
17 கார்த்திகை மாதம், 2013 ஞாயிற்றுக்கிழமை.

## அன்னை மரியின் இதயம் மகிழ்ச்சியின் இதயம்.
## அவரின் உள்ளம் ஆனந்த உள்ளம்.
## அவரின் வாழ்வு பேரின்ப வாழ்வு.

ஒவ்வொரு மனிதனும் மகிழ்ச்சியாக வாழ்வதற்காகவே பிறந்திருக்கின்றான். அதற்குத்தான் ஆசையும்படுகின்றான். மகிழ்ச்சி என்பது அவரவர் மனதைப் பொறுத்தது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் மகிழ்ச்சி புதைந்து கிடக்கிறது. சிலர் நல்லவற்றிலும் நன்மையிலும் மட்டுமே மகிழ்ந்திருப்பர். தீமை என்றதும் விட்டுவிலகி ஓடுவார்கள். துன்பத்திலும் மகிழத் தெரிந்தவன்தான் உண்மையில் வாழத் தெரிந்த மனிதன். சிரிப்பை தொலைத்தவன் வாழ்வின் பெரும் பகுதியை தொலைத்தவனாவான். எமக்குள் மகிழ்ச்சி இருந்தால்தானே சிரிக்க முடியும்.

ஒரு பட்டுப்புழு வண்ணத்துப்பூச்சி சிறகடித்துப் பறப்பதைப் பார்த்து மகிழ்ந்தது. பட்டுப்புழுவின் ஏக்கம் தானும் அவ்வாறு பறந்து மகிழ வேண்டும் என்பது தான். தனது ஆசையை வண்ணத்துப்பூச்சியிடம் கூறியது. அதற்கு அது நீ என்னைப்போல் பறக்க ஆசைப்பட்டால் நீ உன் நிலையில் இருந்து மாறி புது உரு கொடுக்க வேண்டும். உன்னால் முடியுமா? நீ தயாரா? எனக்கேட்டது. பட்டுப்புழு தன்னை இழக்கத் தயாரானது. அழகிய வண்ணத்துப்பூச்சியாக உரு கொடுத்து பறந்து திரிந்தது. துன்பத்தை மகிழ்வுடன் ஏற்றுக்கொள்பவர்கள் தான் இன்பத்தை மகிழ்ச்சியுடன் அனுபவிக்க முடியும்.

நாம் அனைவரும் பரிசுத்த திருச்சபையால் பிரகடனப்ப டுத்தப்பட்ட மரியன்னை ஆண்டில் நுழைய இருக்கின்றோம். அன்னை மரியாள் எப்போதும் எவ்வேளையிலும் மகிழ்ச்சியோடு வாழ்ந்தவள். அன்னை மரியின் இதயம் மகிழ்ச்சியின் இதயம். அவரின் உள்ளம் ஆனந்த உள்ளம். அவரின் வாழ்வு பேரின்ப வாழ்வு. அதனால்தான் அவர் பிறந்தது முதல் தம்மையே கடவுளுக்கு காணிக்கையாக்கி மகிழ்ந்தார். தனது அன்பு பெற்றோரிடம் இறைவார்த்தையைக் கற்று ஆனந்தித்தார். கடவுளின் தாயாகும் நற்செய்தியை இறைத்தூதர் மூலம் அறிந்து பேருவகைக் கொண்டார். இயேசுவைக் கருத்தாங்கி பெற்றெடுத்ததிலிருந்து ஆனந்த நடனமாடினார். இப்படியாக மகிழ்ச்சியின் மாதாவாக ஆனந்தத்தின் அன்னையாக பேருவகையின் பெருமகளாக கடவுளின் புகழைப் பாடிக் கொண்டே இருந்தார்.

மரியா துன்பங்களில் துவண்டு நின்ற நிலையிலும் வியாகுல வாளால் ஊடுருவப்பட்டப்போதிலும் மீட்பரின் தாயாக வேண்டும் என்ற இன்பச்செய்தி அறிவிக்கப்பட்டபோதும் ***"இதோ உன் தாய்"*** என இயேசு சிலுவையடியில் நின்ற மரியாவை உலக மாதாவாக உலகிற்கு கொடுத்த போதும்சரி அன்னைமரி இறைவனைப் புகழ்ந்து பாடிக்கொண்டே இருந்தார். எல்லாவற்றிற்கும் மேலாக அன்னைமரி இறைத்திட்டம் எனும் துன்பக்கலத்தை துணிவுடன் ஏற்றுக் கொண்டதால்தான் ஆண்டவரின் தாய் என்ற மகிழ்ச்சியை அனுபவிக்க முடிந்தது.

அன்று பட்டுப்பழு தன்னுரு இழந்து புது உரு கொடுத்ததால்தான் வண்ணத்துப்பூச்சியாக பறந்து மகிழ்ந்தது.. அதுபோல் அன்னை மரியின் ஆண்டில் சங்கமித்திருக்கும் நாமும் முடிந்தளவு புது உரு கொடுக்க முயல்வோம். அன்னையைப் போன்று எவ்வேளையிலும் இன்பத்திலும் துன்பத்திலும் மகிழக் கற்றுக்கொள்வோம். நல்லதை மட்டுமே நினைத்து நன்மைகள் செய்து நிறைவாக வாழும்போது மகிழ்ச்சி எம் இதயங்களில் பொங்கி வழியும்.

இறையாசிருடன்
ஆசிரியர்

# கிறிஸ்து அரசர் பெருவிழா



ஆண்டவர் இயேசுவை பல பெயர்களால் அல்லது அடை மொழிகளால் நாம் அடையாளப்படுத்துகின்றோம். “மெசியா” அல்லது “கிறிஸ்து” (அருள்பொழிவு செய்யப்பட்டவர்) “இயேசு” (மீட்பர்) “இம்மானுவேல் (கடவுள் நம்மோடு) “தாவீதின் மகன்” (அமைதியின் அரசர்) யாவேயின் ஊழியர், நல்ல ஆயர், இறைவனின் செம்மறி என்று பல பெயர்களால் அழைக்கின்றோம். ஒவ்வொரு பெயரும் ஒவ்வொரு விதத்தில் இயேசுவை வெளிப்படுத்துகின்றன. ஆனால் அவை அனைத்தும் இயேசுவை முழுமையாக வெளிப்படுத்த முடியாது.

திருவழிபாட்டு ஆண்டின் கடைசி ஞாயிறாகிய இன்று திருச்சபை இயேசுவை அனைத்துலகின் அரசர் என அறிக்கையிட்டு கொண்டாடுகின்றது. இந்த விழா திருத்தந்தை பதினோராம் பத்திநாதர் (pope pius xi) அவர்களால் 1925ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இயேசு யூதர்களின் அரசர் மட்டுமல்ல, மாறாக அவர் அரசருக்கெல்லாம் அரசர். அதுமட்டுமல்ல இயேசுவை மனித இனத்தின் அரசர் எனவும் கூறுகின்றோம். ஏனென்றால் இந்த மண்ணில் வாழ்ந்த மிகச் சிறந்த மனிதர் அவரே. அரசர் என்பவன் தன்னைச் சூழ்ந்து வாழும் மக்களின் இன்ப துன்பங்களைச் சரியாக புரிந்துகொண்டு அவர்களின் உணர்வுகளையும் ஏக்கங்களையும் தனதாக்கிக் கொண்டு வாழ வேண்டும். அதற்காக உழைக்கவும் பாடுபடவும் வேண்டும்.

கிறிஸ்து தம்மையே வெறுமையாக்கி, இருளடைந்த வாழ்வில் ஒளியேற்றி, பிறரின் சுமைகளைத் தாங்கிக் கொண்டவர். எனவே தான் சுமை சுமந்து சோர்ந்திருப்போரே உங்களை நான் இளைப்பாற்றுவேன்” என்று நம்முடைய சுமைகளைத் தான், தாங்கிக்கொள்ள நம்மை அழைக்கிறார். மேலும் அவர் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அன்பு யாரிடமும் இல்லை”, என்பதன் மூலம் அவரின் அன்பை அவரது அரசில் அனைவரும் அனுபவிக்க அழைக்கிறார்.

**மகா அலெக்சாண்டர் வாழ்ந்தார்**
**அவரோடு அவர் படை அழிந்தது**
**ஜூலியஸ் சீசர் வாழ்ந்தார்**
**அவரோடு அவர் வீரம் அழிந்தது**

இவ்வாறு பலர் வாழ்ந்து இறந்தாலும், இயேசுவின் அரசு நம் எல்லோருக்கும் ஒரு மாற்றத்தை எண்பிக்கிறது. காரணம் அவரின் அரசு இன்றும் என்றும் அழியாதது. ஏனென்றால் அவரின் அரசு அன்பினால் கட்டப்பட்ட அரசு, அந்த அன்பையே அனைவரின் உள்ளத்திலும் விதைத்துவிட்டார். இயேசு தன் வாழ்க்கையில் மக்கள் அனைவரையும் அவரின் பாதுகாப்பில் பாதுகாத்தவர். கிறிஸ்துவின் அரசு மற்ற அரசுளைப் போன்று அன்று, மற்ற அரசுகள் அவர்களின் சுயநலத்திற்காகவும், அவர்களின் சந்ததிக்காகவும் பதுக்கி வைப்பார்கள். ஆனால் கிறிஸ்துவின் அரசு அவ்வாறானதல்ல, அவரின் அரசு அன்பை அடிப்படையாகக் கொண்டது தனக்காக எதையும் தக்க வைத்துக் கொள்ளாத பகிர்வின் அரசு.

கிறிஸ்து அரசருக்கு ஏன் இன்றும் விழா எடுக்க வேண்டும்? இயேசு உலக அரசர்களிடம் இருந்து வேறுபட்டு தனித்தன்மை வாய்ந்த அரசராக விளங்குகின்றார். இதற்கு முக்கிய காரணம், அவர் சமுதாயத்தில் கைவிடப்பட்டோருக்கு காட்டிய அன்பு, சமத்துவம், சகோதரத்துவம், நீதி பகிர்வு போன்ற பண்புகளாகும். இப்பண்புகளின் வெளிப்பாடே இயேசுவின் அரசு. இவர் யூதர்களுக்கு மட்டும் அரசரல்ல அவர் அரசர்களுக்கெல்லாம் அரசர்.“அவர் கட்புலனாக கடவுளின் சாயல், படைப்பனைத்திலும், தலைப்பேறு எனவே இயேசு கிறிஸ்து உண்மையான அரசர் என்பதில் ஐயமில்லை. நம்மீது அதிகாரத்தையோ, ஆணவத்தையோ செலுத்த இறைமகன் அரசராகவில்லை. மாறாக நம் அனைவரையும் பராமரித்து அன்பு செய்து பணியாற்றவே அவர் அரசராக விளங்குகிறார். ஆகவே கிறிஸ்துவின் அரசில் நாமும் பங்கெடுக்க வேண்டும். இது ஒரு எளிதான காரியமல்ல? நாம் உண்மையில் வாழ்ந்து உண்மைக்கு சான்று பகர வேண்டும். இதற்கு எம்மிடமுள்ள சுயநலன்களை களைய வேண்டும். விட்டுக் கொடுத்து அன்பு செய்து மன்னித்து பகிர்ந்தளித்து வாழ வேண்டும். இன்றைய அரசியல்வாதிகளைப் போல் இல்லாமல் இறை இயேசுவையே நம் வாழ்வின் மையமாகக் கொண்டு வாழும்போது நம்மை சுற்றியுள்ளவர்களையும் வாழ வைக்கும் போது இறையரசை கடவுளின் அரசை இம்மண்ணில் கொணர முடியும் அப்போது கிறிஸ்து அரசர் எம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் குடிகொண்டு ஆட்சி செய்வார்.

## உண்மை உறைக்கும்

கமிலஸ்



# இளைஞர்களின் வழிகாட்டி தோபியா ~ 03



இளையோர் பக்கம்

அங்கம் - 46

# விழா புலம்பலானது

அது பெந்துகோஸ்து விழா நாடு கடத்தப்பட்டச் சூழலில் விழாவைக் கொண்டாட திட்டமிட்டனர் தோபியாவின் குடும்பம். எல்லா வகையான உணவும் தயாரிக்கப்பட்டு, பரிமாறுவதற்கென்று கொண்டு வரப்பட்டன (2:2). உணவு வேளை வந்தவுடன் தோபியாவின் தந்தை "பிள்ளாய் நீ போய், நினிவேக்கு நாடுகடத்தப்பட்ட நம் உறவின் முறையாருள் கடவுளை முழு மனதோடு தேடும் ஏழை எவரையேனும் கண்டால் அவரை அழைத்து வா. அவன் என்னோடு உணவு அருந்தட்டும். நீ திரும்பி வரும்வரை நான் உனக்காகக் காத்திருப்பேன் மகனே" என்றார் (2:2).

நாடுகடத்தப்பட்ட நிலையிலும் விழா கொண்டாடினாலும் தங்களைமட்டும் வசதி படைத்தவராக அல்ல, தங்களின் நலனில் மட்டும் அக்கறை கொண்டவராக அல்ல, மாறாக தன் இனத்தைச் சேர்ந்தவர், கடவுளைத் தேடுபவர், உறவினர் யாரேனும் இருந்தால் அவர்கள் துன்புறக்கூடாது என்று எண்ணியவர். எனவே தான் கொண்டாடும் விழாவுக்குப் பொருள் தரக்கூடிய விதத்தில் ஆதரவற்ற நிலையில் இருப்போரை கூட்டிவர மகனை அனுப்புகிறார். முன்கூட்டியே வசதி படைத்தோரை அழைக்கவில்லை. மாறாக எல்லாம் தயார் செய்யப்பட்ட நிலையில் ஆதரவற்றவர்களைத் தேடிச் செல்ல மகனை அனுப்பி வைக்கிறார்.

தந்தையின் வாக்கு நல்லவர்களை இனம் காண தோபியாவைத் தூண்டுகிறது. அதேபோல் துன்புற்று வேதனையுறும் உறவினரையும், உண்மையில் கடவுளைத் தேடக்கூடியவர்களையும் கண்டுகொள்ள வேண்டும் என்று இதன் வழியாக அழைப்பு விடுக்கிறார். இவ்வகை மனிதர்கள்தான் உண்மை உறவினர்கள். இவர்களைத் தான் விருந்துக்கு அழைக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். இவர்கள் எந்த வகையிலும் தோபியாவின் குடும்பத்திற்கு கைம்மாறு செய்ய முடியாது. பிரதிபலன் பார்க்காமல் நன்மை செய்யக் கூடியத் தன்மையை தன் மகனுக்குக் கற்றுத் தருகிறார். அதாவது நம்முடைய மரபுப்படி "கடமையைச் செய், பலனை எதிர்பாராதே" என்ற தத்துவத்தை வாழ்ந்து காட்டும் வழிமுறையை தோபியா தன்னுடைய சிறு பருவத்திலேயே தந்தையிடமிருந்து கற்றுக்கொள்கிறார்.

## இளைஞர்களின் வழிகாட்டி தோபியா

தோபியா தன் வீட்டிலிருந்து கிளம்பி சந்தையை நோக்கிப் போகிறார். தந்தையின் அறிவுரைக்கு கீழ்ப்படிந்து நடக்கும் நல்ல மகனாகக் காட்டப்படுகிறார். தந்தையோ வீட்டில் உணவருந்தாமல் காத்திருக்கிறார். தோபியா சந்தையை நோக்கிப் போவது மிகவும் வேடிக்கையான ஒன்றாகத் தோன்றலாம். இங்குதான் எல்லாத் தரப்பட்ட மனிதர் - களும் வருவார்கள். பசியோடு இருக்கக் கூடிய மகன் வேடிக்கைப் பார்க்கச் சென்றிருக்கமாட்டான். மாறாக தந்தையின் அறிவுரையை நிறை-வேற்றவே சென்றிருக்க வேண்டும். இச்சந்தையில்தான் ஏழை, பணக்காரர் என்ற வேறுபாடு இல்லாமல் எல்லோரும் ஒன்று கூடுகின்றனர், அதுவும் வியாபார நோக்கத்திற்காக இப்படிப்பட்ட இடத்தில் தந்தை சொன்ன கடவுளைத் தேடும் மனிதர், தன் உறவினர் ஒருவரைத் தேடிப் போனார் அந்த இளைஞர் தோபியா. என்ன நடந்தது தெரியுமா?

## தோபித்துவின் துணிவு

சந்தை வெளிக்குச் சென்று தேவையில் வாடும் உறவினர் ஒருவரை அழைக்கப்போன மகன் தலைதெறிக்க ஓடிவந்தார். வீட்டிற்கு வந்து "அப்பா" என்று அழைத்தார். தோபித்து, "என்ன மகனே" என்று கேட்டார். தோபியா

"கடவுளின் பிரதிநிதியாக மண்ணில் வாழும் ஒவ்வொரு மனிதரும் எல்லா உயிர்களுக்காகவும் பணியாற்ற வேண்டும். பணி செய்வதை மட்டுமே வாழ்வின் மகிழ்ச்சியாக கொண்டவராக" தோபித்து விளங்கினார்.

மறுமொழியாக, "அப்பா, நம் இனத்தாருள் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது சடலம் சந்தை வெளியில் எறியப்பட்டு அங்கேயே கிடக்கிறது" என்றார் (தோபி 2:3).

தந்தையின் நல் எண்ணத்தையும் பிறரக்கு உதவிடும் மனப்பான்மையையும் கற்றுக்கொண்ட தோபியா, தன் வேதனையைக் கொட்டித் தீர்க்கிறார். கொலை செய்யப்பட்டு சடலமாகக் கிடப்பவரை யாருமே கண்டு கொள்ள-வில்லை. அந்நிய மண்ணில் அரசருக்குப் பயந்து பலர் ஒதுங்கி இருந்திருக்கலாம். அல்லது அவருக்கு உறவினர் யாருமே இல்லாமல் இருந்திருக்கலாம். அல்லது அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடியதால் கொல்லப்பட்டிருக்கலாம்... சந்தை வெளிக்கு வந்த எவருக்குமே இதயத்தில் ஈரமில்லை. பிறர்மேல் அக்கறையில்லை. தங்களுக்கெனப் பொருள்களை வாங்குவதும் பிறரைக் கண்டு கொள்ளாமல் செல்வதும் என்ற சுயநலப் போக்கு அவர்களிடம் மிகுந்திருந்தது.

தயார் செய்யப்பட்டிருந்த உணவை விட்டுவிட்டு சந்தை வெளியில் பிணமாய்க் கிடக்கும் தன் இன மனிதரை நல்லடக்கம் செய்யத் தேடிப் போகிறார் தோபித்து. வழியோரத்தில் ஆதரவற்ற பிணமாய் கிடந்தவரை தூக்கிக்கொண்டு வீட்டுக்கு வருகிறார். கதிரவன் சாயும் வரைக் காத்திருக்கின்றார். குளித்து விட்டு விருந்துணவை சோகத்துடன் உண்டார் (2:5). தன் வீட்டிலே ஒருவர் இறந்தது போன்ற சோகம். கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட மனிதர்களின் துன்ப, இன்பத்தை தன்னுடையதாக மாற்றிக் கொண்டவர் தோபித்து. இப்படி பிறரோடு துன்புறும் நல்ல பழக்கத்தை இளைஞர் தோபியா தன் தந்தையிடமிருந்து கற்றுக்கொள்கிறார்.

மகிழ்வாரோடு மகிழுங்கள் அழுவாரோடு அழுங்கள்" (உரோ 12:15) என்னும் பவுலின் போதனையை முன்கூட்டியே வாழ்ந்து காட்டிய குடும்பம்தான் தோபியாவின் குடும்பம். பிறரின் மகிழ்ச்சியில் பங்கெடுத்து மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தவும், பிறரின் துக்கத்தில் பங்கெடுத்து மகிழ்ச்சியை மிகுதிப்படுத்தவும் அவர்களின் சுமைகளைப் பாதியாக்கவும் கற்றுத்தரும் உயர்ந்த குடும்பத்திலிருந்து வந்தவர் தோபியா. என் இனிய இளைஞர்களே, நாம் எப்படி?

கதிரவன் மறைந்த பின்னர் இறந்த மனிதரை அடக்கம் செய்தார். அவருக்கென துக்கம் கொண்டாடினார். தோபித்துவின் செயலைக் கண்டு அவரின் உறவினர் பலரும் அவரது இனத்தைச் சேர்ந்த மனிதர்களும் எள்ளி நகையாடினர். அவரின் செயல் அவரை வம்பில் மாட்டிவிடும் என்றும், முன்பு ஏற்பட்ட ஆபத்து மீண்டும் ஏற்பட்டு விடக் கூடும் என்றும் எண்ணி வருத்தப்பட்டனர். எனினும் தோபித்து யாருடைய சொற்களையும் பொருட்படுத்தாது கடவுளுக்கென மிகவும் தைரியமாக இப்படிப்பட்ட துணிகரமான செயல்களில் ஈடுபட்டார். "கடவுளின் பிரதிநிதியாக மண்ணில் வாழும் ஒவ்வொரு மனிதரும் எல்லா உயிர்களுக்காகவும் பணியாற்ற வேண்டும். பணி செய்வதை மட்டுமே வாழ்வின் மகிழ்ச்சியாக கொண்டவராக" தோபித்து விளங்கினார். பிறரன்புப் பணி செய்வதை தோபியா தன் தந்தையான தோபித்துவிடமிருந்து கற்றுகொள்கிறார். தந்தையின் உணர்வைப் புரிந்து நடந்து கொள்கிறார். தந்தைக்கு உதவிடும் நல்ல மகனாகத் திகழ்கின்றார்.

## சோதனையும் வேதனையும்

அடக்கம் முடித்து, வீடு திரும்பி குளித்தார் (2:9) இரவு வீட்டு முற்றத்தின் சுவர் அருகில் படுத்து உறங்கினார். மனவேதனை பல்வேறு சிந்தனைகள் அவரை வாட்டி எடுத்தன. ஏன் இப்படிப்பட்ட அவலமான சாவுக்கு கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்ட மக்கள் உள்ளாக வேண்டும்? தன் இனத்தைச் சார்ந்த மற்றவர்களும் ஏன் தந்தைப்போன்று அக்கறை எழவில்லை? ஏன் மற்றவர்களைப்போல் தான் ஒதுங்கியிருக்க முடியவில்லை? அவர் இவ்வாறெல்லாம் எண்ணியிருக்கக் கூடும். இதனால் தான் வீட்டிற்குள் சென்று உறங்காமல், மனப்பாரத்துடன் வீட்டு முற்றத்திலேயே உறங்குகின்றார். தோபித்து.

களைப்பால் உறங்க முயற்சிக்கும்போது, சுவரின் மேலிருந்து குருவியின் சூடான எச்சம் கண்களில் விழுகின்றது. இதனால் கண்களில் வெண்புள்ளிகள் தோன்றின. மறு நாளிலிருந்து நலம் பெறுவதற்காக மருத்துவர்களைத் தேடிப் போகின்றார். மருத்துவர்களின் மருந்து அவரின் கண்பார்வையை குணமாக்கவில்லை. மாறாக அவரின் பார்வை மெல்ல மெல்ல இழக்கச் செய்தது இறுதியில் முற்றிலும் பார்வை இழந்து போனார்.

இதன் பிறகு நான்கு ஆண்டுகளாக பார்வையற்றவராகவே வாழ்ந்தார்.

பார்வையற்ற நிலையில் இருக்கும் தந்தைக்கு தோபியா எப்படி உதவினார் என்று எந்தவொரு குறிப்பும் விவிலியத்தில் காணப்படவில்லை. முதல் இரண்டு ஆண்டுகள் அகிக்கார் என்ற உறவினர் தோபியாவின் குடும்பத்தைக் கவனித்துக் கொண்டார். அவரின் தந்தை தோபித்து வேலைக்குச் சென்று பணம் ஈட்ட முடியாத நிலையில் அகிக்கார் ஆதரவு தந்து குடும்பத்தின் சுமையைத் தாங்கிக் கொண்டார் என்று நூலின் ஆசிரியர் விபரிப்பதன் மூலம் தோபியா வேலைக்குச் சென்று பணம் ஈட்டும் வாலிபப் பருவத்தை அடையவில்லை எனவும் கணிக்கலாம்.

எனினும் இந்த ஆதரவு நிலை, அகிக்கார் என்பவர் எலிமாய் என்ற இடத்திற்கு மாறிப்போனவுடன் மாற்றம் கண்டது. முற்றிலும் பார்வை இழந்த தோபித்து வேலைக்குச் செல்ல முடியாத நிலை. இதனால் வறுமை மெல்ல மெல்ல அவர்கள் இல்லத்திலும் நுழைந்தது. பிறருக்கு உதவி செய்து செல்வந்தராய் வாழ்ந்து வந்த தோபித்து வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டார். இவ்வறுமையின் சூழலில் வளர்ந்த தோபியா பெற்றோருக்கு எந்த விதத்திலும் பிரச்சினைத் தராத மகனாகவே காட்டப்படுகிறார். இக்காலக் கட்டத்தில் இளைஞர் தோபியாவைப் பற்றிய எந்த ஒரு குறிப்பையும் தோபித்து நூலானது நமக்குத் தரவில்லை.

குடும்பத்தில் ஏற்பட்ட சோக நிகழ்ச்சியின் விளைவாகக் குடும்பப் பொறுப்பு தோபியாவின் தாய் அன்னா மீது விழுந்தது. அன்னா பெண்களுக்குரிய கை வேலைப்பாடுகளில் ஈடுபட்டு, வீட்டிலேயே வேலை செய்து வந்தார். நெய்தல் வேலையில் நேர்மையுடனும், உண்மையுடனும் உழைத்தார் அன்னா. கணவரின் நற்பணிக்கு ஒத்துழைப்பு தந்தவரல்லவா? எனவே தன் கணவர் போலவே நேர்மையான உழைப்புடன் வறுமைப்பட்டுள்ள தன்னுடைய குடும்பத்தை தன் உழைப்பால் காக்க முயன்றார்.



## புது படைப்பாக மாற!

இளைஞனே! உன்னை
இன்னொரு இறைவன் என்பேன்.
நீதான் புதிய சிந்தனையின் சிற்பி.
உன்னிடம் துடிப்பது
இதயம் மட்டுமல்ல
உன் சூடான இரத்தமும்தான்.
தவறான விசயங்களை கண்டால் நீ எரிமலை
உன் உழைப்புக்கு ஈடாக எதுவுமில்லை
உன் மனம் வேண்டுமானால்
கல்லாக இருக்கலாம்
ஆனால் சமுதாயத்தின் உளி
உன்னை சிலையாக்கிவிடும்
காயங்கள் கொண்ட காகிதம் உன் இதயம்
சமுதாயம் என்னும் பலரால் கசக்கப்படலாம்
ஆனால் புதிய படைப்பாக மாற
இவை எல்லாம் உனக்கு ஒரு பொருட்டல்ல!
இளைஞனே! நீ விழுந்தால் விதையாக இரு!
எழுந்தால் மலையாக இரு!
உனக்குள் இருக்கும்
திறமையை தூங்க விடாதே!
யாரேனும் ஏதாவது சொன்னால் துவண்டுவிடாதே!
ஏனென்றால் நீ விழ வேண்டியவன் அல்ல
உன்னைக் கண்டு பலரும் எழ வேண்டும்
உன் முன்னால்
செல்பவனைக் கண்டு செல்லாதே!
எல்லோருக்கும் முன்னோடியாக நீ செல்
உன் பாதையில் கல்லும் முள்ளும் இருக்கலாம்
பல சுமைகள்
உன்னை இறுக்கலாம்
படைப்பின் படைகளின் தளபதி நீ
உன் சிந்தனைக்கு கண்டு பிடிப்புகளும்
நல்லவை நோக்கி நகர வேண்டும்
சமுதாயம் வேறு, நீ வேறு அல்ல
சமுதாயத்தின் ஆணிவேரே நீதான்
அன்று இயேசு சிலுவை சுமந்தார் உலகுக்காக.
இன்று நாமும் சுமக்கிறோம்
கழுத்தில், பெயருக்காக!
நீ கிறிஸ்தவன் என்பது சொல்லி தெரிவதில்லை
உன் செயலில் தெரிய வேண்டும்.
இளைஞனே உன் உடலை வேண்டுமானால்
மண்ணுக்குள் மறைய வை
ஆனால் நீ செய்த நன்மையையும் பெயரையும்
மக்கள் மனதில் பதியவை
இளைஞன் நினைத்தால் முடியாதது எதுவுமில்லை
அவனுக்கு ஈடு இணை எதுவுமில்லை
புதுமைக்கும் உன்னைப் புகுத்தி விடு
புதியதை புதையலாக எடுத்துவிடு
தவறான விஷயங்களுக்கு
உன் காலை தடுத்து விடு
புதிய படைப்பாக மாற எழுந்துவிடு
இந்த உலகில் மாற்றம் ஒன்றுதான் மாறாதது
நீ மாற வேண்டும் !அதுவும்
**புதிய படைப்பாக** மாற வேண்டும்.

# தேவதாய் எமது வாழ்வின் நம்பிக்கை நட்சத்திரம்.

# மரியன்னை ஆண்டு



திருவழிபாட்டின் ஆண்டை ஆரம்பிக்கும் திருவருகைக்காலத்தின் முதல் ஞாயிறு அன்று (01.12.2013) கொழும்பு உயர் மறைமாவட்டம் மரியன்னையின் ஆண்டாக "year of mary' or the Marian year" பிரகனப்படுத்தியுள்ளது. இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் மகிழ்ச்சியோடும், நம்பிக்கையுடனும் மெசியாவின் வருகைக்காக ஆவலுடன் காத்திருந்ததன் சின்னமாக நின்று நிலைப்பதுதான் திருவருகைக்காலம். நமது நம்பிக்கை வாழ்வின் வள்ளல் இயேசுவை நமது இதயக் கோவிலில் வரவேற்கும் காலமதில் மரியான்னையின் ஆண்டினை ஆரம்பிப்பது, எமக்கு மகிழ்ச்சிக்குரியதும், சேய்கள் நாம் அவருக்குக் காட்டும் பெரும் மதிப்புமாகும்.

மரியன்னையில் காணப்பட்ட இறை நம்பிக்கை-யும், அன்னையின் வாழ்வும் மனுக்குலத்தில் தோன்றிய மனிதருள் மாணிக்கமாக அவளை மாற்றியது. கன்னிமையும், தாய்மையும் ஒரு சேரப் பெற்றவளாக, இறைவனின் திருக்குமாரனைத் தரணிக்குத் தந்தவர் மரியாள். "இது எப்படி ஆகும்?" "மனிதரால் கூடாதது இறைவனால் கூடும்" இதையே மரியாளிடம் எலிசபெத் கூறி மகிழ்ந்தாள். "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று நம்பிய நீர் பேறுபெற்றவள்" (லூக் 1:45) இது மரியன்னையின் விசுவாசத்தின் பிரதி-பலிப்பாகும்.

## மரியாள் இறைவனின் அன்னை

ஆக்கம். அருட்சகோதரர். S. தொபியாஸ் C.M.S.F, மாத்தளை

மரியாள் இறைவனின் அன்னை என்பது மரியாள் பற்றிய விசுவாசக் கோட்பாடாக இருப்பினும், அக்கோட்பாடு எழுந்த சூழல் இறையியல் சூழலாகும். இயேசு மனிதனா? இறைவனா? என்ற வாதங்கள் ஒரு தலை சார்பான தப்பறைகளுக்கு இட்டுச் சென்ற சூழலில் நிசேயா பொதுச்சங்கம் (கி.பி 325) இயேசுக்கிறிஸ்துவை மனிதனும், இறைவனும் என்று அறிவித்தது. இந்த மறை உண்மைக்கு விளக்கம் தருவதே "இறைவனின் அன்னை" கோட்பாடாகும்.

இறைவனுக்கே அன்னையா?, தொடக்கத்துக்கே தொடக்கமா? என்னும் கேள்விகள் எழுவது இயற்கை. இறைமகன் இயேசுவை ஈரைந்து மாதங்கள் தனது உதரத்தில் தாங்கி மனுவுருவில் தரணிக்குத் தந்து, மனுக்குலத்தையே மகிழ்ச்சியில் ஆழ்த்திய அற்புத அன்னை மரியாள் இறைவனின் தாய் என வரலாற்றில் வாழ்த்தப் பெறுகின்றாள். கி.பி 430இல் எபேசு நகரில் கூடிய பொதுச்சங்கம் "மரியன்னை இறைவனின் அன்னை" (The Tokos) என அழைத்தது. மரியன்னை பற்றிய விசுவாசக் கோட்பாடுகளில் இது முதல் விசுவாசக்கோட்பாடாகவும் அமைகிறது.

வருடத்தில் முதல் மாதம், தை மாதம் முதலாம் திகதி "இறைவனின் அன்னை மரியாள்" பெருவிழாவை அகில உலகத் திருச்சபை கொண்டாடுகின்றது. இதனை ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர் இயேசுவின் பெயர் சூட்டு விழாவாகத் திருச்சபை நினைவு கூர்ந்து வந்தது. இயேசுவின் பிறப்பு மரியாளின் தாய்மை இன்றிப் பேசப்பட இயலாதது. இருப்பினும் இயேசுவின் பிறப்பிற்கு உரிய முக்கியத்துவம் கொடுக்கும் முகமாகத்தான் கிறிஸ்துவின் பிறப்பும் எட்டு நாட்களில் அவரது அன்னையின் தாய்மையும் போற்றப்படுகின்றது.

5ஆம் நூற்றாண்டு இறையியலாளர் நிசேயா நகர கிரகோரியார் கன்னிமையும், தாய்மையும் எவ்வாறு இணைந்து செல்லும் என்ற வினாவிற்கு அழகான பதில் தருகின்றார். மோசே கண்ட காட்சியில் முட்செடி எரிந்தது. ஆனால் கருகிப் போகவில்லை. (வி.ப 3:1-3, 9-12) அதேபோன்று மரியா என்னும் நசரேத்தூர் நங்கை தாயாக மாறினாலும், அவளது கன்னிமை அழியவில்லை. இது இயற்கைக்கு மாறானது. ஆனால் மரியாளுக்கு மட்டும் இறைவனால் அருளப்பட்ட ஒரு விசேட கொடையாகும். இறை மகனைச் சுமந்ததால் போற்றப்படும் தாய்மை இது (லூக் 1:26-28) மரியாள் இறைவனின் வார்த்தையை ஏற்றதால், அவளின் வாழ்க்கையில் எண்ணற்ற வியாகுலங்களைச் சந்தித்தாள். சவாலாக வாழ்ந்தாள். "அவர் சொல்வதைச் செய்யுங்கள்" (யோவா 2:5)

மரியாளின் பிறர் நல சேவை தனது ஒரே பேறான மகனை உலகம் மீட்புப்பெற, இந்த உலகமே அமைதி பெற ஈந்ததாகும். அன்னை மரியாள் எப்பொழுதுமே தனது மகன் வழியாக மக்களிடையே உறவுகள் வளர வேண்டும் என்று ஆசிக்கின்றவளாக இருப்பதால் கானா ஊரின் திருமணத்தில் "அவர் சொல்வதைச் செய்யுங்கள்" என்று திருமண வீட்டின் வைபவத்தின் போது ஏற்பட்ட பிரச்சினையைக் கண்டு அதனால் ஏற்படக்கூடிய விளைவை உணர்ந்து மகனில் நம்பிக்கை வைக்க வழிகாட்டினாள். அவள் மகிழ்ச்சியின் நற்செய்தியாகிய இயேசுக்கிறிஸ்துவை தன்னுள் ஏற்றுக்கொண்டவள். தாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற கொள்கைக்கு ஏற்ப இயேசு செய்த முதல் அரும் செயலின் (புதுமை) மூலம் விசுவாசிகளின் தாயானாள். அனைவருக்கும் இறை இயேசுவில் விசுவாசம் அதிகரிக்கவும், அவரின் அன்னையின் மூலம் கேட்கும் வரம் கிடைக்கும் என்ற நம்பிக்கை வளரவும் காரணமானவள் மரியன்னை. உலக மீட்பர் எமக்குத் தந்த மனுக்குலத்தின் தாய்.

நமது ஆன்மீக வாழ்க்கைக்கு மரியன்னை எப்போதும் துணையாக இருக்கின்றார். இன்றைய சமுதாயத்தில் நிலவும் அநீதி, அதற்கு ஆளாகி அமைதி-யிழந்து தனி நபர்கள், குடும்பங்கள், அன்னையின் பிரசன்னத்தில் அமைதி காண்பதையும், அதனால் அன்னையின் திருத்தலங்கள் பக்தர்களால் நிறைந்து ஓய்வின்றி அன்னையை நோக்கிச் செபிப்பதையும் காண முடிகின்றது. உலகில் உண்மையான அமைதியும், அன்பும் பெருகிட எமது குடும்பங்களில் சாந்தி, சமாதானம், ஒற்றுமை நிலைத்திட அன்னை வழி, தாய்மை வழி, நம் செயல்பாடுகளிலும், குணத்திலும் அன்புத் திருமகன் இயேசுக் கிறிஸ்துவின் உயிருள்ள வார்த்தைக்குச் செவிமடுத்து அந்த வார்த்தையில் வாழ்ந்து மண்ணக வாழ்வை மாண்புடனும், விண்ணக வாழ்வின் எதிர்நோக்குடனும் "விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும்" (யோவா 15:7) என்ற முழு நம்பிக்கையில் விண்ணக, மண்ணக அரசியாம் மரியன்னையின் ஆண்டில் எமது விசுவாச வாழ்வைத் தொடர்வோம். அன்னை வழி இயேசுவிடம் நெருங்கிச் செல்வோம்.

ஆடித்திங்கள் 27ஆம் திகதி 2013ல் பிரேசில் உலக இளைஞர் தினத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இளையோருக்குக் கூறிய அறிவுரைகளில் "இன்னும் அழகியதொரு திருச்சபையை உயர்ந்ததோர் உலகை உருவாக்க நீங்கள் அழைக்கப்பட்டிருக்கிறீர்கள்! நமது பார்வையை அன்னை மரியாயின் பக்கம் திருப்பு-வோம். இறைவனுக்கு ஆம் என்றுரைத்த அவர் இயே-சுவைப் பின் தொடர நமக்கு ஒரு சிறந்த வழிகாட்டியாக இருக்கின்றார். "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" (லூக் 1:38) என்று கூறிய மரியாளுடன் இணைந்து நாமும் செல்வோம்" என்றார். இதே திருத்தந்தை 2013 ஐப்பசித் திங்கள் 13ஆம் நாள் முழு மனுக்குலத்தையும் மரியாளின் மாசற்ற திரு இருதயத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

# அன்புதான் வாழவைக்கும்

ஒரு பெண் அவளுடைய வீட்டை விட்டு வெளியேறிய பொழுது மூன்று முதியவர்கள் அவள் வீட்டின் முன் அமர்ந்திருந்தார்கள். அவர்களைப் பார்த்த அப்பெண் நீங்கள் யாரென்று எனக்கு தெரியவில்லை. இருந்தாலும் உங்களை பார்த்தால் பசியுடன் இருப்பதாக தெரிகிறது. அதனால் என் வீட்டிற்கு வாருங்கள். நான் ஏதாவது சாப்பிடுவதற்கு தருகிறேன் என்று அம்மூவரையும் அழைத்தாள்.

அதற்கு அம்மூவரும் வீட்டில் உன் கணவன் இருக்கிறாரா? என்று கேட்டார்கள். அதற்கு அப்பெண் அவர் வீட்டில் இல்லை. வெளியே சென்றிருக்கிறார் என்று பதிலளித்தாள். அப்பொழுது அவர்கள் அப்படியென்றால் உனது கணவர் வரும்வரை நாங்கள் வரமாட்டோம் என்று கூறினார்கள். மாலையில் அவளுடைய கணவன் வீட்டிற்கு வந்தபொழுது அவள் நடந்தவற்றை கூறினாள். அதற்கு அவள் கணவன் நான் வீட்டிற்கு வந்துவிட்டேன் என்று கூறி அவர்களை அழைத்துக் கொண்டு வா எனக் கூறி-னான்.

அவள் வீட்டிலிருந்து வெளியே வந்து அம்மூவரையும் அழைத்தாள். அதற்கு அவர்கள் நாங்கள் மூவரும் ஒன்றாக வர முடியாது என்று கூறினார்கள். ஏன் அப்படி என அவர்களிடம் கேட்டாள். அதற்கு அவர்களில் ஒரு முதியவர் இன்னொருவரை காண்பித்து இவர் செல்வம் என்றும், மற்றொருவரை காண்பித்து இவர் வெற்றி என்றும் நான் அன்பு என்றும் கூறி உள்ளே சென்று உன் கண-வனிடம் எங்கள் மூவரில் யார் உன் வீட்டிற்கு வரவேண்டும் என்று ஆலோசனை செய்து எங்களிடம் சொல் என்று அவளிடம் கூறி-னார். அப்பெண்ணும் வீட்டிற்குள் சென்று தன் கணவனிடம் அம்முதியவர் கூறிய அனைத்தையும் கூறினாள். அதைக் கேட்ட அவளுடைய கணவன் மிகவும் மகிழ்ச்சியாகி என்ன ஆச்சரியமாக இருக்கிறது! என கூறிவிட்டு நம் வீட்டுக்கு செல்வத்தை அழைப்போம் அவர் நம் வீட்டை செல்வத்தால் நிரப்பிவிடுவார் என்று தன் மனைவி-யிடம் கூறினான்.



அதைக் கேட்ட மனைவி அதற்கு அதிருப்தி தெரிவித்துவிட்டு ஏன் நாம் நம் வீட்டிற்கு வெற்றியை அழைக்கக் கூடாது? என்று கேட்டாள். இவை அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த அவர்களுடைய மகள் ஏன் நாம் அன்பை அழைக்கக்கூடாது? அவரை அழைத்தால் நம் வீட்டை அன்பால் நிரப்பிவிடுவார் அல்லவா? என்று அவள் தன் கருத்தைக் கூற அவளுடைய பெற்றோர் தங்களுடைய மகளின் ஆசையின் படி அன்பை வீட்டிற்கு அழைக்க முடிவு செய்கின்றனர். பிறகு கணவன் தன் மனைவியிடம் நீ வெளியே சென்று அன்பை நம் வீட்டிற்கு அழைத்து வா என்றான். அப்பெண் வெளியே சென்று அம்மூவரையும் பார்த்து உங்களில் யார் அன்பு, அவர் என் வீட்டிற்கு விருந்தாளியாக வருமாறு அன்புடன் அழைக்கிறேன் என்றாள்.

அதைக்கேட்ட அன்பு வீட்டிற்கு செல்கிறார். அவரைப் பின் தொடர்ந்து மற்ற இருவரும் செல்கின்றனர். இதைப் பார்த்த அப்பெண் மற்ற இருவரிடமும் ஏன் நீங்கள் வருகிறீர்கள்? நான் அழைத்தது அன்பை மட்டும்தானே? என்று ஆச்சரியப்பட்டு கேட்டாள். அதற்கு அம்மூவரும் ஒன்றாக அப்பெண்ணிடம், "நீ செல்வத்தையோ அல்லது வெற்றியையோ அழைத்திருந்தால் மற்ற இருவரும் வெளியே இருந்திருப்போம். ஆனால் நீ அன்பை அழைத்திருக்கின்றாய். எங்கு அன்பு இருக்கின்றதோ அங்கு செல்வமும், வெற்றியும் இருக்கும்" என்று பதிலளித்தார்கள்.

***அன்பு தான் நம்மை அதிகம் சந்தோஷப்பட வைக்கும்.***




# குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

*பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா*
*உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.*



## உண்மையாக வாழ்தல்

திருமண வாழ்வில் கணவன் மனைவி இருவரும் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள உண்மையுடன் வாழப் பழக வேண்டும். ஒருவர் மற்றவரைச் சந்தேகத்தோடு பார்க்கத் தொடங்கினால் உறவு மேலும் முறியக்கூடும். திருமணவாழ்வின் ஆரம்பத்திலிருந்தே ஒருவர் மற்றவரைச் சந்தேகிக்கத் தொடங்கினால் பாதுகாப்புணர்வு குறைந்து நரம்புத் தளர்ச்சி நோய்க்கு ஆளாகலாம்.

அன்பு என்பது ஒருவரைக் குறைகளோடும் நிறைவுகளோடும் நிபந்தனையில்லாது ஏற்றுக்கொண்டு அவரது நன்மைக்காக, வளர்ச்சிக்காக என்னை அர்ப்பணிப்பதே. அன்பு என்பது எடுப்பதல்ல. கொடுப்பதே. எடுக்கும் நோக்கில் கொடுப்பதுமல்ல, ஒருவரை அன்பு செய்யத் தீர்மாணம் எடுக்கும்பொழுது அவரிடமிருந்து எனக்கு என்ன நன்மை கிடைக்கும் என எதிர்பார்த்து உறவு கொள்வதல்ல.

ஒருவர் மற்றவருக்குப் பிரமாணிக்கமாக, உண்மையாக இருப்போம் என்றுதான் திருமண நாளில் வாக்குறுதி கொடுத்தோம். பெரும்பாலானவர்களால் அந்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்த முடியாமல் போவது எதனால்?

ஒன்று சிறுவயதிலிருந்து பிரமாணிக்கமாக வாழ்வது எப்படி? என்பதைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமயத்தலைவர்களின் வாழ்விலிருந்து கற்றுக்கொள்ள முடியாத நிலை. என்னை மற்றவர் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றால் முகமூடி போட்டு போலியான வாழ்வு, பொய்யான வாழ்வு வாழவேண்டும் என்ற பழக்கம் இருக்கக்கூடாது.

அடுத்தது மனமுதிர்ச்சி இல்லாத நிலை. மனமுதிர்ச்சி உள்ளவர் மற்றவர்கள் சந்தேகப்படாதவாறு வாழ்வர். உதாரணமாக வேலை முடித்து வீட்டுக்கு வரும் கணவன் வழக்கத்துக்கு மாறாக இன்று சற்றுத் தாமதித்துவிட்டது, பிந்திவிட்டது என்று அதற்கான காரணத்தை மனைவியிடம் கூறுவார். ஆனால் மனமுதிர்ச்சி இல்லாதவராக இருந்தால் பிந்தி வந்ததற்கான காரணத்தை அவர் கூறமாட்டார். அதனால் மனைவிக்குப் பல சந்தேகங்கள் எழக்கூடும்.

அதுமட்டுமல்ல இன்று நுகர்வுக் கலாச்சாரத்திலே போட்டி மனப்பான்மை உருவாகி வருகின்றது. மனித உறவை விட பணம், சொத்து, கல்வி இவற்றிற்கே முதலிடம் கொடுக்கின்றோம். அதனால் மிகவிரைவாக குறுக்கு வழிகளில் செல்வந்தராகப் பார்க்கின்றோம். பொய், ஏமாற்று போன்றவைகள் எமது மூலதனங்களாக மாறுகின்றன. இதனால் கணவன், மனைவி உறவிலும் உண்மைத்தன்மை குறைகின்றது. எனது பெலவீனங்கள் குறைகளோடு என்னை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று எண்ணி முகமூடிபோட்டு நடிக்கின்றோம்.

எல்லாவற்றிக்கும் மேலாக இறைவன் எனக்குப் பிரமாணிக்கமாக இருக்கின்றார். அன்பு செய்கின்றார். இதை நான் நம்பினால்தான் நான் மற்றவருக்குப் பிரமாணிக்கமாக வாழலாம்.

நாம் எல்லோரும் போலியான, சுயநலமுள்ள, மாறுகின்ற அன்பை விரும்புவதில்லை. ஆனால் மற்றவர்களுக்கு போலியான, சுயநலமுள்ள, மாறுகின்ற அன்பையே கொடுக்கின்றோம். மாறாக, அன்பைக் கொடுக்க இறைவனின் அன்பை அனுபவிக்க வேண்டும். இறைவன் என்னை அன்புசெய்ய இடம் கொடுக்க வேண்டும். அதை நம்ப வேண்டும். அப்பொழுதுதான் மற்றவர்களை அன்பு செய்ய, உண்மையாக இருக்க, பிரமாணிக்கமாக வாழ என்னால் முடியும்.

***சிந்திப்போம்! செயற்படுவோம்!!***

*தொடரும்...*

## கத்தோலிக்கர் பெறும் தூய ஆவியாரின் அனுபவம்

# விசுவாசத்தைக் காக்க விழிப்பாயிருங்கள்

திருச்சபையின் தொடக்க காலத்தில் இருந்தே தூய ஆவியார் கத்தோலிக்கரை ஆட்கொண்டு இயக்கிவருகிறார். இவரைப்பற்றிய அனுபவம் கத்தோலிக்கர் ஒருவருக்குப் புதிதானது அல்ல. ஆண்டவருடைய தாயான தூய மரியோவே தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்ட அனுபவத்தை முதன் முதலில் பெற்ற கத்தோலிக்கப் பெண்மணி. இவரைவிட வேறு எவரும் ஆவியாரின் அனுபவத்தை முழுதாய் இதுவரை பெற்றதும் இல்லை இனிவரும் காலத்தில் பெறப்போவதும் இல்லை. எனவே கன்னி மரியாவே, தூய ஆவியாரின் அனுபவம் பெறும் கத்தோலிக்கர் ஒருவருக்கு முன்னோடியாய் இருக்கின்றார். இவர் பெற்ற தூய ஆவியாரின் அனுபவம் பரவசத்தால் உண்டாகும் உணர்ச்சி அனுபவம் அல்ல, மாறாக இது அவருக்கு ஆரவாரமற்ற, அமைதியான அன்றாட வாழ்வின் தொடர் அனுபவமாய் இருந்தது. இவரைப்போன்றே கத்தோலிக்கர் எல்லோருக்கும் தூய ஆவியாரின் அனுபவம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஏற்படும் பரவச அனுபவமாய் இராது, வாழ்வு முழுவதையும் உள்ளடக்கிய நீண்ட காலத் தொடர் அனுபவமாய் இருக்கிறது.

கத்தோலிக்க திருச்சபையில் கிறிஸ்து ஒருவரோடு நேரடியாக முதலில் தொடர்பை ஏற்படுத்தவில்லை. அவர் தம் பணியாளர்கள் வழியாகவே தொடர்பு கொள்கின்றார்கள். ஆயர், குருக்கள், திருத்தொண்டர்கள் வழியாக இவருக்குத் திருமுழுக்கு வழங்குவதால் இத்தொடர்பு உண்டாகின்றது. திருமுழுக்கின்போது பணியாளர்கள் கிறிஸ்துவின் ஊடகங்களாகச் செயற்படுகிறார்கள். இதைப் போன்றே ஆயர்கள், உறுதிபூசுதல் வழியாகத் தூய ஆவியாரை மக்களுக்கு வழங்கும் பணியாளர்களாய் இருக்கிறார்கள். இவர்கள் திருத்தூதரின் நேரடி வாரிசுகளாய் இருப்பதால் தங்களின் அபிசேகம் செய்யப்பட்ட கைகளைத் திருமுழுக்குப் பெற்றோரின் தலைகள்மீது விரித்து வேண்டுதல் செய்வதன் வழியாகத் தூய ஆவியாரை இவர்களுக்கு வழங்குகிறார்கள். ஒருமுறை தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்ட கத்தோலிக்கர் ஒருவர் அதன்பின் எங்கேயும், எந்நேரத்திலும் தூய ஆவியாரை அழைத்து அவரோடு தொடர்புகொண்டு சேர்ந்து வாழக்கூடியவராய் இருக்கிறார். தூய ஆவியார் ஒருவரிடம் நிலைகொள்வதால், அவர் ஞானம், மெய்யுணர்வு, நுண்மதி, ஆலோசனை, உறுதி, பக்தி, மரியாதை என்ற ஏழு திருக்கொடைகளையும், அன்பு, மகிழ்ச்சி, அமைதி, பொறுமை, பரிவு,

அருட்பணி. பிலிப் I.V. Dei

நன்னயம், நம்பிக்கை, சாந்தம், தன்னடக்கம் போன்ற கனிகளையும் வாழ்வாக்குகிறார். இந்த வழக்கம் திருச்சபையின் தொடக்கத்தில் இருந்தே வந்துகொண்டிருக்கின்றது. தூய ஆவியாரை இவ்வாறு வாழ்க்கை அனுபவங்களில் சுவைக்காத ஒருவர், பெயர் அளவில் மட்டுமே கத்தோலிக்கராய் இருப்பார். இருபது நூற்றாண்டுகளாக இருந்துவருகிற தூய ஆவியாரின் இவ்வனுபவத்தை கத்தோலிக்கர் இலகுவாக இழந்துவிடமாட்டார்கள்.

தூய ஆவியாரைப் பெற்றுக்கொண்ட கத்தோலிக்கர் ஒருவர், அந்த அனுபவத்தைத் தன் வாழ்வில் வெளிப்படுத்துவார். இவர் செபிப்பதில் ஆர்வம் உள்ளவராகவும், தினமும் இறைவார்த்தையை வாசித்து உள்வாங்குவதில் கருத்துள்ளவராகவும், கிறிஸ்துவுக்குச் சாட்சியாக வாழ்வதில் துடிப்புள்ளவராகவும் தென்படுவார். இவர் மூவொரு இறைவனில் நங்கூரமிட்டவராய், தேவநற்கருணை ஆண்டவரோடு நெருங்கிய உறவுள்ளவராயும், மரியா புனிதர்களோடு தொடர்புள்ளவராகவும் இருப்பார்.

தொடரும்...

# மனதை ஒரு நிலைப்படுத்தினால் அறிவு திறனை மேம்படுத்தலாம்.

நமது வாழ்க்கையில் சாதிக்க வேண்டும் என்றால், எந்தவொரு செயலையும் முழு கவனத்துடனும், ஒருங்கிணைந்த மனதுடனும் ஈடுபடவேண்டும். மனதை ஒருமுகப்படுத்தும்போது நாம் எடுத்த காரியத்தை சிறப்புடன் முடித்து வெற்றிவாகை சூடலாம்.

ஒருநிலைப்படுத்தப்பட்ட மூளையில் தான் எந்த ஒரு தகவலையும் ஒருங்கிணைந்து சேகரிக்க முடியும். மூளை எப்போதும் ஆரோக்கியமாகவும், துடிப்பாகவும், சுறுசுறுப்பாகவும் செயல்படுத்துவதற்கான பயிற்சிகளை நாம் தினமும் மேற்கொள்ள வேண்டும். மூளை சரியாக இயங்கும் போது, நாம் செய்ய நினைத்த காரியத்தை சுலபமாக குறித்த நேரத்தில் செய்ய முடிகிறது.

மூளையானது குறிப்பிட்ட தகவல்களை ஆழமாகவும், வேகமாகவும், தொடர்புடைய தகவல்களை நினைவுகூர்ந்து நம்மை செயல்பட வைக்கிறது. மூளை பலத்துடன் இயங்குவதற்கு தொடர்ந்து நாம் சில விஷயங்களைப் பின்பற்ற வேண்டும். தினமும் 2 லீட்டர் தண்ணீரை பருகவேண்டும். 6 முதல் 8 மணி நேர உறக்கம் கண்டிப்பாக எடுத்துக் கொள்ள வேண்டும். காய்கறிகள், பழங்கள் தினமும் உணவில் சேர்த்துக் கொள்ளவேண்டும். வைட்டமீன் சத்து அதிகமுள்ள தானியங்களை எடுத்துக் கொள்ளலாம்.



மூளையின் பலத்தை அதிகரிக்க கூடுதல் திறனை வளர்த்துக் கொள்வது அவசியம். எந்த ஒரு செயலில் ஈடுபடும் போதும் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் அழுத்தம் கொடுக்காமல் அறிவு திறனை வளர்க்கும் செயலில் நம்மை ஈடுபத்தவேண்டும்.

நாம் செய்யும் ஒவ்வொரு விஷயமும் மூளைக்கு தொடர்புடையது. எனவே மன அழுத்தத்துடன் எந்த ஒரு செயலிலும் ஈடுபடாமல் தெளிந்த சிந்தனையுடன் மனதை ஒருமுகப்படுத்தி செயல்பட்டால் நாம் அடைய விரும்பும் இலக்கை சுலபமாக கைப்பற்ற முடியும்.

## சிறு துளிகள்...

1) ஒரு சில சமயம் உன் நண்பர்களை நீ தேர்ந்தெடுக்கிறாய். சில சமயங்களில் அவர்கள் உன்னைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

2) எவன் பிறர் நற்செயல்களைப் பார்த்து மகிழ்ச்சி கொள்ளவில்லையோ, அவனால் நல்ல செயல்கள் எதையும் செய்ய முடியாது

3) பெருமைக்காரன் கடவுளை இழப்பான், பொறாமைக்காரன் நண்பனை இழப்பான். கோபக்காரான் தன்னையே இழப்பான்

4) அன்பு என்பது கண்ணுக்கு தெரியாத நீரூற்று. அது எப்போது எப்படி தோன்றுகிறது என்பதை நாம் அறிய முடியாது.

5) எந்த ஒரு காயத்திற்கும் நண்பன் மருந்தாவான். ஆனால் நண்பன் ஏற்படுத்தும் காயத்திற்கு மருந்தே இல்லை.

6) நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன. ஆனால் அனுபவமோ தவறான முடிவுகளில் இருந்து கிடைக்கின்றன.

7) மனிதன் தோல்வியின் மூலமே புத்திசாலி ஆகின்றான்.




## பொதுக்காலத்தின் 33ஆம் ஞாயிறு 17.11.2013

**வாசக விளக்கம்:** பபிலோனுக்கு நாடு கடத்தப்பட்ட யூத மக்கள் ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் இறைவனின் இரக்கத்தால் தங்கள் தாய் நாடு திரும்புகின்றனர். அப்போது அங்கு நிலவிய வறுமை, குருக்கள் மக்களிடையே நிலவிய ஒழுக்கமின்மை, பொருளாதார சிக்கல்கள், எதிரிகளின் அச்சுறுத்தல்கள் போன்றவற்றால் சோர்வடைந்து "ஒருவேளை ஆண்டவர் தம் உடன்படிக்கையை மறந்துவிட்டாரோ என ஐயமுறுகின்றனர். அவ்வேளை இறைவாக்கினர் மலாக்கியா "ஆண்டவரின் நாள் கண்டிப்பாக வரும் அந்நாள் தீமையைச் சுட்டெரிக்கும் நெருப்பாகவும் நன்மைக்கு வாழ்வு தரும் திருநாளாகவும் அமையும்" என முதல் வாசகம் விளக்குகின்றது. இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றிய செய்திகளை சரிவரப் புரிந்து கொள்ளாமல் சும்மா இருப்பதே நலம் என்று சோம்பித்திரிந்த மக்களுக்கு தூய பவுல் அடியார் ஆண்டவர் வரும்வரை சோம்பித் திரியாமல் பாடுபட்டு உழைக்க அழைப்பு விடுப்பதை இரண்டாம் வாசகம் எடுத்துரைக்கின்றது. நற்செய்தியில் வெற்றி ஆர்ப்பரிப்போடு ஜெருசலேம் நுழைந்த இயேசு கோவிலைத் தூய்மையாக்கி மக்களுக்குப் போதிக்கையில் சிலர் ஜெருசலேம் கோவிலின் அழகை சுட்டிக் காட்டுகிறார்கள். ஆனால் இயேசு எருசலேம் ஆலயத்தின் அழிவை உலக அழிவின் அடையாளமாக முன்னறிவிக்கிறார். தன் பெயரின் பொருட்டு சீடர்கள் அனைவரும் துன்புறுத்தப்படுவார்கள் என்றும், இத்துன்பங்களை சமாளிக்க தேவையான ஞானத்தை தருவதாகவும் சீடர்கள் மனவுறுதியோடு நிலைத்து நின்று தமக்கு சான்று பகர வேண்டும் என்று கூறுகிறார். நாமும் விழிப்பாயிருந்து இயேசுவின் பாதையில் நடக்க இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** மலாக்கி 4:1-2

உங்கள் மேல் நீதியின் கதிரவன் எழுவான்

**பதிலுரைப்பாடல் :** மக்களினங்களை ஆண்டவர் நேர்மையுடன் ஆட்சி செய்வார்

**இரண்டாம் வாசகம் :** 2 தெசலோ 3:7-12

உழைக்க மனமில்லாத எவரும் உண்ணலாகாது

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா நீங்கள் தலைநிமிர்ந்து நில்லுங்கள் ஏனெனில் உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** லூக் 21:5-19

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

சாட்சிய வாழ்விற்கு தன் மக்களை வழிநடத்திச் செல்லும் தூய திருச்சபையையும், அதன் தலைவரான பாப்பரசர், மேற்றாணிமார், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் அனைவரும் அற வாழ்வில் நிலைத்து, அன்பு வழியில் நடந்து தூய வாழ்வில் வழிநடக்கத் தேவையான அருள்வரங்களை தந்தருள வேண்டுமென்று..

எமது நாட்டின் அரசியல், சமூக, சமயத் தலைவர்கள் அனைவரும் சொன்னதை செய்யவும், செய்ததை சொல்லவும் கூடிய முன்மாதிரிகையான வாழ்வால் எமது நாட்டையும், மக்களையும், முன்னேற்றவும், எங்கெல்லாம் அறம் மறைந்து அநியாயம் தலைதூக்குகின்றதோ அங்கெல்லாம் ஆண்டவர் வருகிறார் என்பதை உணர்ந்து வாழவும் வேண்டிய நல் மனதை தந்தருள வேண்டுமென்று...

ஆண்டவரின் வருகைக்காக எப்பொழுதும் நாம் விழிப்பாய் இருக்கவும், நீர் காட்டும் பாதையில் வழி நடக்கவும், எமது விசுவாச வாழ்விற்கு எதிராக வரும் இன்னல்களையும், இடையூறுகளையும் பொறுமையுடன் ஏற்று வாழவும், தூய பவுல் அடியாரைப் போன்று நாமும் சான்று பகர்ந்து வாழவும், தேவையான அருள்வரங்களை தந்தருள வேண்டுமென்று...

## கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழா 24.11.2013

**வாசக விளக்கம்:** இன்று நாம் கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அத்துடன் ஒருவருட வழிபாட்டு ஆண்டினை நிறைவு செய்து புதிய வழிபாட்டு ஆண்டினை தொடங்குகின்றோம். அரசர் என்பதற்கும் அரசுரிமை என்பதற்கும் புதிய அத்தியாயத்தை எழுதியவர் இயேசு. அரசர் என்பவர் அடக்கி ஆள்பவர் என்ற அடிமைச் சிந்தனையை மாற்றி "அன்பு செய்பவர்" என்ற புதிய விடுதலைச் சிந்தனையை கொடுத்தார் இயேசு.

இன்றைய முதல் வாசகம் இஸ்ராயேலின் அனைத்துக் குலங்களும் தாவீதிடம் சென்று "நீயே எங்களுக்கும் ஆயனாய் இருப்பாய்" என்று வேண்டுவதைப் பார்கின்றோம். கிறிஸ்துவின் மேன்மையை விளக்கும் இரண்டாம் வாசகம் கிறிஸ்துவே கடவுளின் சாயல் அவரே அனைத்திலும் எதையும் நிலைக்கச் செய்பவர் திருச்சபையின் தலைவர் அனைத்தையும் படைத்தவர் கடவுளோடு நம்மை ஒப்புரவாக்குபவர் என்று பவுல் அடியார் விபரிப்பதைக் கூறுகின்றது. இயேசுவின் இறையாட்சியரசு அன்பு, நீதி, உண்மை, மகிழ்ச்சி இரக்கத்தை அடித்தளமாக வைத்துக் கட்டப்பட்டது. நல்ல கள்வன் இயேசுவின் இறையாட்சி மதிப்பீடுகளை நம்பினான். இயேசுவை விசுவசித்தான் தீய கள்வனோ உலகம் காட்டும் அரசாட்சி மதிப்பீடுகளை நம்பினான். நல்ல கள்வனைப்போல் இயேசுவின் இறையாட்சி மதிப்பீடுகளை நமதாக்கிக் கொள்ள இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் :** 2 சாமு 5:1-3

இஸ்ராயேலின் அரசராக அவர்கள் தாவீதைத் திருப்பொழிவு செய்தனர்

**பதிலுரைப்பாடல் :** அகமகிழ்வுடன் ஆண்டவரது இல்லத்திற்குப் போவோம்.

**இரண்டாம் வாசகம் :** கொலோசையர் 1:12-20

தந்தையாம் கடவுள் நம்மை விடுவித்துத் தம் அன்பார்ந்த மகனின் ஆட்சிக்கு உட்படுத்தினார்

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவர் பெயரால் வருகிறவர் போற்றப்பெறுக! வரவிருக்கும் நம் தந்தை தாவீதின் அரசு போற்றப்பெறுக அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் :** லூக் 21:5-19

### விசுவாசிகளின் மன்றாட்டு

பதில்: ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்

கிறிஸ்து அனைத்துலக அரசர் பெருவிழாவைக் கொண்டாடும் எமது திருச்சபையும் இயேசுவைப் போல் தன் மக்களை ஆட்சி செய்யும் திருப்பீடத்தையும் அதன் தலைவரான பாப்பரசர், மேற்றாணிமார், குருக்கள், துறவியர், ஆகிய அனைவரும் இயேசுவின் நிலையான அரசில் மக்களை ஒன்றுசேர்க்க உழைத்திடத் தேவையான அருள்வரங்களை தந்தருளுமாறு தந்தையே உம்மை மன்றாடுகின்றோம்.

எமது நாட்டை ஆளும் தலைவர்களும், சமூகத் தலைவர்களும் இயேசுவின் இறையாட்சில் துலங்கும் அன்பு, நீதி, உண்மை, மகிழ்ச்சி இரக்கம் போன்வற்றை அடித்தளமாகக் கொண்டு மக்களுக்குப் பணிபுரியவும், வழிநடத்தவும், சுயநலன்களை களைந்து, பொதுநலம் பேணவும், அமைதி நிறைந்த சுபீட்சமான வாழ்வை அனைவருக்கும் வழங்கவும், தேவையான அருள் வரங்களை தந்தருள வேண்டுமென்று தந்தையே உம்மை....

இயேசுவை எமது உள்ளத்திலும் இல்லத்திலும் அரசராக ஏற்றுக்கொண்டுள்ள நாம் அனைவரும் நல்ல கள்வனைப்போல் இயேசுவின் இறையாட்சி மதிப்பீடுகளை நமதாக்கிக் கொள்ளவும் எமது விசுவாசத்தை ஆழப்படுத்தி இருளின் ஆட்சியில் இருந்து விடுபட்டு ஒளியின் ஆட்சிக்குள் நுழையவும் தேவையான அருள் வரங்களை தந்தருள வேண்டுமென்று தந்தையே உம்மை....

## மறைக்கல்வி நிலையமா? மறைக்கல்வி நடுநிலையமா?

இலங்கையிலே 12 மறைமாவட்டங்கள் உள்ளன. இந்த 12 மறைமாவட்டங்களிலும் அந்தந்த மறைமாவட்டங்களில் மறைப்பணி ஆற்றுவதற்கு மறைக்கல்வி இயக்குனர்கள் 12 பேர் உள்ளனர். இந்த இயக்குனர்கள் தமது மறைமாவட்டங்களில் மறைக்கல்வி நிலையத்தினூடாக மறைக்கல்விக்காக அரும்பணியாற்றுகின்றனர். மறைக்கல்வியை நோக்கமாகக் கொண்ட இந்த செயற்பாட்டில் மறைக்கல்வி வகுப்பு மாணவர்களும் மறையாசிரியர்களும் முக்கியத்துவம் வகிக்கின்றனர்.

முழு வருடத்திற்குமான நிகழ்ச்சித் திட்டங்களைத் தயாரித்து அவர்கள் கிறிஸ்துவைத் தம் அனுபவங்கள் வாயிலாக பெற்றுக்கொள்வதை நோக்காகக் கொண்டே மறைக்கல்வி நிலையங்கள் செயற்படுகின்றன.

இந்த மறைக்கல்வி நிலையங்கள் அனைத்தும் மறைக்கல்வி நிலையங்கள் என்று - உதாரணமாக கொழும்பு மறைக்கல்வி நிலையம், மன்னார் மறைக்கல்வி நிலையம், யாழ் மறைக்கல்வி நிலையம் என தமது மறைமாவட்ட இடத்தின் பெயரைக் கொண்டு அழைக்கப்படுகின்றன.

தேசிய மறைக்கல்வி நிலையமானது இந்த 12 மறைமாவட்ட மறைக்கல்வி நிலையங்களையும் ஒன்றிணைத்து பணியாற்றுகிறது. கத்தோலிக்க கல்வி, விவிலிய பணி, மறைக்கல்வி தொடர்பான தீர்மானங்கள் அனைத்தும் தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தில் நிறைவேற்றப்படுகின்றன. இந்த தேசிய ஆணைக்குழு கூட்டத்தின் தலைவராக கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை, துணை தலைவராக மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு ஜோசப் பொன்னையா ஆண்டகை ஆகியோர் பணியாற்றுகின்றனர். தேசிய மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் அருட்பணி பியால் ஜானக்க அடிகளாவார்.

ஆணைக்குழு கூட்ட அங்கத்தவர்களாக மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர்களுடன் மேலும் பிரதிநிதிகள் இருவரும், கல்வி, விவிலியப் பணி பிரதிநிதிகளும் பங்குபற்றுவர்.

இந்த 12 மறைமாவட்டங்களும் **தேசிய மறைக்கல்வி நடுநிலையம்** என்ற மரத்தின் கிளைகளாக செயற்படுகின்றன. **தேசிய மறைக்கல்வி நடுநிலையம்** அனைத்து மறைமாவட்டங்களுக்கும் மையமாக இயங்குவதால் அதனை **தேசிய மறைக்கல்வி நடுநிலையம்** என அழைக்கிறோம். அதன் கிளை மறைக்கல்வி நிலையங்களை நடுநிலையம் என கூறும்போது அங்கே கருத்துப் பிழை சொற்பிழையைக் காண்கிறோம். ஆகவே அந்த தவறை நிவர்த்தி செய்யும்போது.

தேசிய மறைக்கல்வி நிலையம் அவ்வாறே **தேசிய மறைக்கல்வி நடுநிலையம்** என அழைக்கப்பட வேண்டும்.

மற்ற மறைக்கல்வி நிலையங்களை நடுநிலையம் என கூற முடியாது. அவை உ + ம் : கொழும்பு மறைக்கல்வி நிலையம், யாழ் மறைக்கல்வி நிலையம், மன்னார் மறைக்கல்வி நிலையம், என்றே அழைக்கப்பட வேண்டும். அவை நடுநிலையம் ஆக முடியாது. காரணம் ஒரே ஒரு நடுநிலையம். அது தேசிய மறைக்கல்வி நடுநிலையம் ஆகும்.

அருட்சகோதரி ரஞ்சி போல்துரை
தேசிய மறைக்கல்வி நடுநிலையம்

## உலகின் மிகப்பெரிய 'டொப் டென்' தேவாலயங்கள்

1. புனித பேதுரு பேராலயம் வத்திக்கான்.
2. தூய அப்பாரெசிடா மாதா பேராலயம் பிரேசில்.
3. செவில் பேராலயம், ஸ்பெயின்.
4. புனித யோவான் பேராலயம், அமெரிக்கா.
5. மிலான் பேராலயம் - இத்தாலி.
6. லிவர்பூல் பேராலயம், (U.k) ஐக்கிய நாடுகள்.
7. தூய லிச்சன் மாதா திருத்தலம், போலந்து.
8. தூய திரித்துவப் பேராலயம், போர்த்துக்கல்.
9. திரு இருதய பேராலயம், பெல்ஜியம்
10. தூய சமாதான மாதா பேராலயம் (Basilica), ஐவரி கோஸ்ட்.



## அமுத மொழிகள்

'ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் மணிமுடி, அது அமைதியைப் பொழிந்து உடல்நலனைக் கொழிக்கச் செய்கிறது (சீராக் 1:18).

'பொறுமையுள்ளோர் தக்க காலம்வரை அமைதி காப்பர். பின்னர், மகிழ்ச்சி அவர்களுள் ஊற்றெடுத்துப் பாயும்' (சீராக் 1:23).

# விசுவாசத்தின் ஒளி

# லூமன் ஃபிதே




## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் திருத்தூது மடல்

### திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஆயர்கள், குருக்கள், அருட்தொண்டர்கள் மற்றும் விசுவாசமிக்க இறைமக்களுக்கு எழுதிய திருத்தூது மடல்




## 1. நம்பிக்கை எனும் விளக்கு

இறை இயேசு கொண்டு வந்த திருச்சபை மரபு எனும் அருங்கொடை இதுவே. **"என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இருளில் இராதபடி நான் ஒளியாக உலகிற்கு வந்தேன்"** என்று யோவான் நற்செய்தி 12:46இல் தன்னைக் குறித்தே இயேசு சான்று கூறுகின்றார். புனித பவுலும் அவ்வாறே, **"இருளிலிருந்து ஒளி தோன்றுக! என்று சொன்ன கடவுளே எங்கள் உள்ளங்களில் அவரது ஒளியை வீசச் செய்தார்"** என்று (2கொரி 4:6) கூறுகிறார். ஒளியை விரும்பிய சிலை வழிபாட்டு மக்களும் அன்றன்றைய சூரிய உதயத்தின் போது தமது சூரியக் கடவுள் வான்வழி வளரக்கண்டு நேர்ந்து கொண்டனர். மறைந்து சென்ற சூரியன் மறுநாள் காலை புதிதாக மலர்வதையும் கண்டனர். இருந்தும் மனித வாழ்வு நீடித்திருக்க இதன் ஒளி மட்டுமே போதுமானதாக இல்லை. சூரிய ஒளியால் சிலவற்றை வெற்றி கொள்ள இயலவில்லை. இறந்த ஒருவன் மீது இருள் சூழ்கையில், ஒளியைக் காணவியலா ஓர் நிலை கண்களை மறைத்திருக்க அங்கு இவ்ஒளியினால் பயன் ஏதுமில்லை எனக் கண்டனர். புனித ஜஸ்டின் "சூரியன் மீதுள்ள விசுவாசத்தை நம்பி இதுவரை எவரும் மரித்ததாக இல்லை. அகண்டதோர் அண்டவெளி என, படர்ந்தோர் விசுவாசம் திறக்கப்பட, கிறிஸ்து இயேசுவை உண்மைக் கதிரவன் என்றும் அவரே வாழ்வு தரும் ஒளிச்சுடர் என்றும் ஏற்றுக் கொண்டனர் கிறிஸ்தவ மக்கள். தனது சகோதரன் லாசர் மரித்த நிலையில், மார்த்தாவை நோக்கி, **"நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் என நான் உன்னிடம் கூறவில்லையா?"** என்றார் இயேசு. நம்புவோர் காண்பர்; அதிகாலை விடிவெள்ளியாக உதித்து எழுந்து என்றுமே மறையாது உயிர்த்தெழுந்த ஆண்டவரிடமிருந்து பெருகிவரும் ஒளி வெள்ளமானது ஒருவரது வாழ்வுப் பயணம் முழுவதுக்கும் வழிகாட்டும் எனவும் கண்டனர்" என்கின்றார்.

## இது மாய விளக்கா?

2. நம்பிக்கை விளக்கைக் குறித்துப் பேச முற்படுகையில், சில பழமைவாதிகளின் தடைச் சொற்களையும் நாம் கேட்க வேண்டி இருக்கும். பழம்பெரும் மக்களுக்கு வேண்டுமானால் அவ்விளக்கே போதுமானதாக இருந்திருக்கலாமென தற்காலத்தினரால் கருதப்படுகின்றது. கூடவே எதிர்காலத்தைப் புதிய கண்ணோட்டத்தில் கொண்டு செல்ல விழையும் இப்புதிய தலைமுறையானது, புரட்சிகரமான சிந்தனைகளால் கர்வம் கொண்டு, அவை அனைத்தையும் தேவையற்றதாகவே கருதுகிறது. அறிவுக்கேற் வினாக்களை எழுப்புவதன் மூலம் மனித இனத்தை நிமிர்த்து நிற்கச் செய்வதைத் தடுப்பதுடன், விசுவாசமென்பது ஒரு மாய விளக்காகவே சிலருக்குத் தோற்றமளிக்கிறது. இளைஞன் நீட்சே தனது சகோதரி எலிசபெத்திடம், "நிச்சயம் நடக்குமென்பது இல்லாவிட்டாலும் ஒருவர் தனது சொந்த வழியைத் தோடிக்கொள்ள வேண்டும். அப்போதுதான் மனித இனத்தின் பாதை புலப்படும்; உனக்கு ஆன்ம அமைதியும், மகிழ்ச்சியும் வேண்டுமானால், நம்பிக்கை கொள்; ஆனால், உண்மையைக் கடைப்பிடிப்பவனாக இருக்க விரும்பினால், அதனைக் தேடிக் கண்டு பிடி" என்றான். நம்பிக்கை என்பதும் தேடிக் கண்டு பிடிப்பதும் ஒன்றுக்கொன்று முரணானது. அந்நேரம் முதல் நீட்சே கிறிஸ்தவத்தை விமர்சிப்பதை வழக்கமாகிக் கொண்டதுடன், கிறிஸ்தவமே மனித இனம் வாழ்வதைக் குறைவுபடுத்துவதாகவும், புதினம் விரும்புவதைக் களைவதாகவும் கூறிவந்தான். அவ்வாறே, விசுவாசமென்பது ஒரு மாய விளக்கு என்பதுடன், அதுவே, விடுதலை பெற்ற மனித இனத்தை எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்ல ஒரு முட்டுக்கட்டையாகவும் உள்ளது தெரியவருகிறது.

3. இச்சூழலில், விசுவாசம் என்பது இருளுடன் இணைந்தே செயல்படுகிறது. ஆதாரங்களின் வழியே அழைத்துச் சென்று விசுவாசத்தை நிரூபிக்க முற்பட்டவர்களும் சிலர் உண்டு. நிச்சயத்தன்மை இயலாத நிலை ஏற்படும் போதும், ஆதாரமான விளக்கு ஒளி எட்டாத போதுமே இத்தகைய சூழ்நிலைகள் உருவாகிறது. எனவே விளக்கொளி அற்ற நிலையில், கண்மூடித்தனமாக உந்தப்பட்டு, இருளை நோக்கிச் செல்வதாகவோ, அல்லது செல்லவேண்டிய பாதையைக் குறிப்பிடும் அடையாள விளக்காகவோ அல்லாமல், உண்மையில் இதயத்திற்கு இதமும், தனிப்பட்ட ஆறுதல் பெறவும் ஏற்றதொரு விளக்காகவே அறிந்துகொள்ளப்பட்டது. மெதுவாக இருந்தாலும் சரி நிச்சயமாக, எதிர்காலத்திற்கு ஒளியூட்டச் சுயமாகத் தோற்றுவித்த ஆதாரங்கள் எதுவுமே போதுமானதல்ல என்பதும் தெளிவாகிவிட்டது. முடிவில், எதிர்காலம் இருண்டதாவதுடன், அறியவியலா சக்திகளினால் அச்சமேற்படவும் கூடும். இதன் காரணமாக, உண்மை எனும் பேரொளியைத் தேடிய மனித இனமும், வழிகாட்ட இயலாத ஒன்றுக்கு ஒளியோற்றி வைத்த சிறு விளக்குகளை நாடியே தேடி நிறைவு கொள்ள வேண்டி இருக்கும். இருப்பினும், விளக்கில்லா நிலை குழப்பத்தை உண்டாக்குகிறது; இதனால் நன்மையினின்று தீமையையும், கரை சேரவியலா பயணத்துடன் சேரவேண்டிய இடத்தையும் கண்டு பிரித்துப் பார்ப்பது என்பது இயலாமற்போகும்.



## 4. ஏந்த வேண்டிய விளக்கு

விசுவாசமெனும் விளக்கு அணைந்து போனால், பிற அனைத்து விளக்குகளுமே மங்கத் துவங்கும் என்பதால், விசுவாசமே விளக்கு என்பதை மீண்டும் உணரத்தக்கதாக, ஒரு அவசரத் தேவை எழுந்துள்ளது. விசுவாசம் எனும் விளக்கு ஒன்றே தனித்துவம் வாய்ந்தது என்பதால், மனித இனம் தழைப்பதன் ஒவ்வொரு காரணத்தையும் அறிந்து அதனால் மட்டுமே அதனைத் தூண்டிவிடவும் இயலும். உலகம் தோன்ற ஆதாரமான ஒரு விளக்கொளி இல்லாமல் நம்மிடம்




உண்டாகும் ஒளியால் இத்தகைய பிரகாசம் ஒன்று ஏற்படாது. ஒரே வார்த்தையில், அது கடவுளிமிருந்து தோன்றும் ஒளியாகத்தான் இருக்க முடியும். உயிருள்ள கடவுளிடம் கொண்ட அன்புறவால் புறப்படும் விசுவாசப் பண்பினால், கடவுளும் தமது எல்லையில்லா அன்பை வெளிப்படுத்துகிறார். அவ்வன்பையே அடித்தளமாக்கி அதனில் பாதுகாப்பு தேடவும், நம் வாழ்வைக் கட்டியெழுப்பவும் கூடும். இவ்வன்பினால் மனமாற்றம் பெறும் நாம் புதிய கண்களால், புதிய கண்ணோட்டம் வரப்பெறுகிறோம்; இதனால், நிறைவாழ்வு கிடைக்குமென்ற வாக்குறுதி இருப்பதாகத் தன்னிறைவு கொள்வதுடன், எதிர்காலத்தை குறித்த புதிய பார்வை ஒன்று நமக்காக திறந்திருப்பதையும் உணர்கிறோம். கடவுளிமிருந்து பெறப்படும் விசுவாசமெனும் அறிவியலா பெருங்கொடையானது, நமது பாதைக்கு ஒளியூட்டி, வாழ்நாள் பயணத்திற்குத் துணைவரும். ஒரு புறம், ஏற்கனவே பெறப்பட்ட அவ்வொளியானது, இயேசு நம்மிடம் கொண்ட களங்கமிலா அன்பின் வெளிப்பாடாக, ஒரு ஆதாரமாகத் துணை வருவதுடன், மரணத்தையும் வெல்லத் துணை புரிகிறது. உயிர்த்த இயேசு நம்மைச் சாவுக்குப் பின்னரும் ஈர்த்துச் செல்வதாலும், விசுவாசம் என்பது எதிர்காலத்திலிருந்து எதிர்வரும் ஒளி என்பதாலும், வழி தெரியாத நமக்கு அவ்வொளியே இயேசுவோடு இணைய, விசாலமான பாதை அமைத்து இட்டுச் செல்கிறது. இருட்டிலோ அல்லது மந்த ஒளியிலோ விசுவாசம் தங்குவதில்லை என்பதை அறிந்து கொள்ள வருகிறோம்; அது நமது இருளை விரட்டும் பிரகாசமான ஒளிதான். பேறுபெற்ற நாடகாசிரியர் டாண்டே என்பவர் புனித பேதுருவின் மீது கொண்ட விசுவாசத்தில், தனது 'டிவைன் காமெடி'யில்:- இவ்வொளியானது, தீப்பொறியாக உருவாகி, எரிகிற தனலாய் உருமாறி தன் நெஞ்சகத்துள், ஒரு விண்மீன் போல விட்டுவிட்டுப் பிரகாசித்துக் கொண்டே இருப்பதாக விவரித்துள்ளார். இவ்வொளியைக் குறித்தே நான் இப்போது குறிப்பிட விரும்புகிறேன். இதனால் தற்கால வாழ்வை அறிவூட்டி வளர்க்கவும், வாழ்நாள் பயணத்திற்கு ஒரு விண்மீனாக இருந்து வழிகாட்டவும், முடியும். இதுவே, ஒளியை நாடித்தேடும் மனித இனத்திற்கு இப்போது முக்கியமான ஒரு தேவையாகும்.



5. இயேசு தனது பாடுகளுக்கு முன்தினம் **"சீமோனே, நான் உனது நம்பிக்கை தளராதிருக்க உனக்காக மன்றாடினேன்"** (லூக் 22:32) என்று, கூறியதுடன், அதே விசுவாசத்தில் அவரது சகோதர சகோதரிகளை உறுதிப்படுத்தவும் வேண்டுகின்றார். இவ்வாறாக, வழங்கப்பட்டதன் அடிப்படையிலேயே, புனித பேதுருவின் வழியுரிமை கொண்ட திருத்தந்தை பதினாறாம் ஆசீர்வாதப்பரும், விசுவாச ஆண்டு என்பதனை அறிவித்தார். விசுவாசப் பண்பு வழங்கிய அகண்ட ஒளியில், நம்மைப் புதுப்பித்துக் கொண்டு, நம்பிக்கை எனும் சந்தோஷத்தை நன்கு உணரவும் ஒரு வாய்ப்பை அவ்வாண்டு உருவாக்கித் தந்தது. தூய ஆவியின் தூண்டுதல்களினால், இறை இயேசுவின் பிரசன்னத்தை உணர்ந்து, அவ்விசுவாசத்தில் தளரா உறுதியும், ஒற்றுமையும், நேர்மையும் காண வழிகண்டது. விசுவாசத்தினால் பெறும் உறுதியான பற்றுறுதி, நிறைவாழ்வையும், உயர்நிலையையும் தருகிறது. ஆதிகால முதல் கிறிஸ்தவர்கள் இயேசுவை முன்னிலைப்படுத்தி செயலாற்றிப் பெற்ற அருங்கொடைகளே இவையாகும். வேதசாட்சிகளைக் குறித்த நூல் ஒன்றில், அன்றைய உரோமைய ஆளுநன், 'ஹியரக்ஸ்' எனும் கிறிஸ்தவரை நோக்கி 'உனது பெற்றோர் எங்கே?' எனக் கேட்க, 'இயேசுவே எனது உண்மையான தந்தை; அவருள் நான் கொண்ட விசுவாசமே எனது தாய்' என்று பதில் கூறுகின்றான். அந்நாளைய கிறிஸ்தவர்களைப் பொறுத்த மட்டில், ஒளியை அளித்த உயிருள்ள கடவுள் இயேசுவே அவர்களது தாய் எனக் கூறப்பட்டது. ஏனெனில் அவ்வொளியே, இறைவாழ்வு அளித்ததுடன், பிறருக்கு முன் இறுதிவரை சாட்சிய வாழ்வு வாழவும், அவ்வொளியே பாதை அமைத்தும் கொடுத்தது.

6. இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் பொன்விழா ஆண்டுத் தொடக்கத்தில் விசுவாச ஆண்டின் தொடக்க விழா கொண்டாடப்பட்டது. திருச்சபைக்கும் பக்தர்களுக்கும் தமது வாழ்வில் கடவுளின் முக்கியத்துவத்தை திரும்ப ஏற்படுத்துவதாகவே, இரண்டாம் வத்திக்கான் சங்கம் விசுவாசத்தின் சங்கமாக நடைபெற்றது என்பது இதிலிருந்து தெளிவாகிறது. திருச்சபை விசுவாசப்பண்பை வற்புறுத்தவில்லை என்றாலும், ஒருவரது வாழ்க்கை எனும் திருப்பயணத்தில், விசுவாசமெனும் அருட்கொடை சீர்பெறவும், வலுப்பெறவும் வேண்டுமென்பது தெளிவாகிறது. ஆண், பெண் இருபாலருக்குமே தமது வாழ்க்கைப் பயணத்தில், விசுவாசமெனும் ஒளியை உள்ளொளியாகத் தூண்டியெழுப்பித் துணை வரச் செய்ய வேண்டிய இரண்டாம் வத்திக்கான் சங்கம் அனைவரையும் ஊக்குவித்தது எனலாம். எத்தகைய பார்வையோ, கோணமோ, விசுவாசமென்ற ஒன்றே ஒருவரது வாழ்க்கையை செம்மைப்படுத்தும் என்பதும் தெளிவாகிறது.

7. விசுவாசத்தின் பொருளை உணர்ந்த திருச்சபையின் கூட்டமைப்பு, திருமறையின் நெறிமுறைகளை, திருத்தந்தை 16ஆம் ஆசீர்வாதப்பரின் நற்பணிகள் மற்றும் நம்பிக்கையைக் குறித்த தனது சுற்றுமடல்களில் ஒரு அறிவிப்பாக வெளியிட்டது. விசுவாசத்தைப் பொறுத்த சுற்றுமடலின் வரைவினை அவரே பெரும்பாலும் இறுதி செய்தார். கிறிஸ்துவில் அவருடைய சகோதரனாகிய நானும் (திருத்தந்தை பிரான்சிஸ்) இதற்காக அவருக்கு நன்றி கூறுவதுடன், அவரது பணியைத் தொடர்ந்து மேற்கொண்டு, அதில் ஒருசில சொந்த கருத்துக்களையும் புகுத்தியுள்ளேன். நேற்றும் இன்றும் என்றும் உள்ள புனித பேதுருவின் உரிமைப் பேறுடையோர் எப்போதும் எந்நிலையிலும் கடவுளால் மனித இனத்திற்கு வழங்கப்பட்ட விசுவாசத்தின் மதிப்பேறப் பெற்ற ஒளியினைக் கொண்டு, தமது சகோதர சகோதரிகளை உறுதிப்படுத்த அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இயற்கையைக் கடந்த விசுவாசமெனும் கடவுளின் அருட்கொடையைக் கொண்டு. நமக்கு வழங்கப்பட்ட அளவில்லா அன்பையும், கூறப்பட்ட அருள் வாக்குகளையும், அறிந்து கொள்கின்றோம். அதே நேரம், அவ்வார்த்தைகளை ஏற்கும்போது, இறை இயேசுவின் வார்த்தைகளே உணவானதும், தூய ஆவி நம்மை உருமாற்றுவதும், எதிர்காலப் பாதைக்கு ஒளியூட்டுவதும், நம்பிக்கை எனும் சிறகோடு மகிழ்ந்து பயணிக்கவும் ஏதுவாகின்றது.

கிறிஸ்தவ வாழ்வில் கடவுளோடு முழுவதுமாக நம்மை இணைத்துக்கொள்ள அதிசயமாகப் பிணைக்கப்பட்ட விசுவாசம், நம்பிக்கை மற்றும் அறப்பணிகள் முன்னின்று நம்மை வழிநடத்துகின்றன. நமக்கு வழிகாட்டவே திறக்கப்பட்ட இவ்விசுவாசமெனும் பாதை எதனை ஒத்ததாக அமைந்துள்ளது? என்பதையும் வாழ்வை வெற்றிகரமாக்கும், பலன்களைத் தரும் இவ்வாழ்வுப் பயணத்திற்கு ஒளியூட்டும் இந்த அற்புத ஒளி எங்கிருந்து வருகிறது என்பதையும் இனி அறிய முற்படுவோம்.

**தொடரும்....**



# சிறுவர் பக்கம்



# எலியும் தவளையும்

ஓர் எலியும் தவளையும் நண்பர்களாய் இருந்தன. எலியின் வளைக்குத் தவளை அடிக்கடி வந்து பண்டங்களை உண்ணும். ஒரு நாள் தவளை எலியைத் தன் வீட்டிற்கு அழைத்தது. எலி தன் காலை தவளையின் காலுடன் சேர்த்துக் கொண்டது. எலி இறந்தால் அது சேர்த்து வைத்துள்ள பண்டங்களை உண்ணலாம் என்று தவளை நினைத்தது. தவளை தண்ணீரில் சிறிது தூரம் நீந்திச் சென்றது. எலி நீந்த முடியாமல் திணறியது. எலி தண்ணீரில் மூழ்கியபோது அதை கொல்வதற்காக அடித்தது. இரண்டும் சண்டையிட்டதை மேலே கழுகு ஒன்று பார்த்தது. உடனே அது கீழே வந்து எலியையும் தவளையையும் தூக்கியது. பின்பு இரண்டையும் இரையாக உட்கொண்டது.

***தீய நட்பு வேதனை தரும்***



*ஆக்கம் : கோடன், தரம் 6, புனித பேதுரு கல்லூரி, பம்பிலப்பிட்டி*

## வரையலாம் வாங்க!



## உண்மையே பேசு

1. உண்மை பேசுதல் வாழ்வின் உயர்வுக்கு வழிவகுக்கின்றது.
2. மண்ணில் பிறந்தவர்க்கு இப்பண்பு இன்றியமையாதது.
3. சிறுவயது முதல் நாம் உண்மை பேசவேண்டும்.
4. பொய் சொல்லுதல் பஞ்சமாபாதங்களில் ஒன்றாகும்.
5. “பொய் சொல்லக் கூடாது பாப்பா”என்கின்றார் பாரதியார்
6. உண்மையின் வெற்றிக்கு அரிச்சந்திரன் கதை நல்ல உதாரணமாகும்.
7. மகாத்மா காந்தி, ஆபிராகாம் லிங்கன் போன்றோரும் இத்தகையவர்களே.
8. உண்மையானது வாய்மை, சத்தியம், மெய் எனப் பலவாறு அழைக்கப்படுகின்றது.
9. உண்மையை உடமையாகக் கொள்ளுதல் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.
10. நாமும் பொய் விலக்கி உண்மை பேசி நன்மை பெறுவோம்.

*ஆக்கம் : k. ஜனனி, தரம் – 5, புதுக்கடைப்பங்கு*

## பழமொழிகள்

பறவை, பிராணி, மிருகம் போன்றவற்றின் பெயர்களைக் குறிக்கும் பழமொழிகள்

1) ஆடு நனையுது என்று ஓநாய் அழுததாம்
2) கழுதைக்குத் தெரியுமா கற்புர வாசனை
3) குரங்கின் கையில் பூமாலை கிடைத்தது போல
4. நக்குகிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன
5. சாண் பாம்பானாலும் முழம் தடிகொண்டடி
6. ஊர் குருவி பருந்தாகுமா?
7. சூடு கண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது
8. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது
9. காகம் திட்டி மாடு சாகாது
10. எருமை வாங்கும் முன் நெய்விலை பேசாதே

*ஆக்கம் : L. ஜெயசீலி லோறன்ஸ், கொழும்பு – 12.*

## அன்னையின் அன்பு

அன்பிற் சிறந்த அமுதமென்றும் ஆனந்த
இன்பிற் பிறந்த இசையென்று ~ என்னுள்ளம்
தன்னில் கரைந்து தவழ்ந்தாடத் தாயே நீ
என்னில் மலர்ந்த இறை!

இறையாக நின்றெனைக் காத்தே இரையை
நிறைவாக ஊட்ட நெகிழ்ந்தேன் ~ மறையாம்
குறளின் வழியில் வளர்ந்தாய்! குளிர்ந்தேன்!
உறவினைக் கண்டே உணர்ந்து!

உணர்ந்தும் எழுதிட உள்வரும் வார்த்தை
கொணர்ந்த இனிமைகள் கோடி! வணங்கும்
மனித தெய்வம் அன்னையென மாமனிதர் சொல்லோ
புனிதமென்றே போற்றும் புகழ்ந்து!

ஆக்கம் :
Daphni Flora, தரம் - 9,
புதுக்கடைப்பங்கு

சிறுவர்களே! உங்களது நத்தார் பற்றிய ஆக்கங்களையும், வரைதல்களையும் எமக்கு அனுப்பி வைக்கவும். அனுப்ப வேண்டிய முகவரி

ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை,
கொழும்பு - 08.

## இயற்கை



இறைவன் வரைந்த ஓவியங்களே ~ நீ
இயற்கை ஆனதன் மாயமென்ன?
வானவில்லிலுள்ள நிறங்களே ~ நீங்கள்
வண்ணப் பூக்கள் ஆனதன் நோக்கம் என்ன?

சுற்றித் திரியும் விலங்குகளும்
சுற்றுகின்ற அகிலமும்
பாய்ந்து வரும் அலைகளும்
பரவசமாகப் பாடும் குயில்களும்
ஆற்றில் திரியும் மீன்களும்
காற்றில் அசையும் மரங்களும்
அழகாக சொல்லிவிடும் ~ என்
கேள்விக்கான பதிலை

நானும் கண்டு வியக்கின்றேன்! ~ இந்த
இயற்கைத் தாயின் அழகினை ~ இன்னும்
தான் இரசிக்கின்றேன் என் உயிரின்
துடிப்பு ஒடியும் வரை...

*ஆக்கம் : V. பிரதீடா, புனித அந்திரேயா பங்கு*



S. மிஸ்டிகா, தரம் - 1, புனித வியாகுல மாதா மறைப்பாடசாலை, கொழு -13.



ஆதர்ஷ் டி குரூஸ், தரம் - 3, புனித ஆசீர்வாதப்பர் கல்லூரி, புனித லூசியாஸ் பங்கு



S. ஆமோஸ், தரம் - 1, திகன பங்கு





R. பிரமிளா, தரம் - 7, வனத்து சின்னப்பர் ஆலயம் (திகன)



சேன் பர்னாந்து, கொழு -13.



P. ஷைனி, கொழு -13.

# புனித பிரான்சிஸ் அசிசி – 12

பிரான்சிஸ் தன் உணவில் சாம்பலைத் தூவி உண்பதைப் பார்த்த சகோதரர் யார் தங்களை பாதி வெந்த கிழங்குகளையும், காய்களையும் உண்பது பற்றிக் குறைகூற முடியும்? குளிர்ந்த பனிக்கட்டியிலும், முட்களின் மத்தியிலும் தன்னையே ஒறுத்துக் கொண்ட பிரான்சிசிடம் குளிரால் வாடுவது பற்றி யார்தான் குறைபட்டுக் கொள்ளமுடியும். எனினும், பிரான்சிஸ் தங்கள் சகோதரர்களின் தேவைகள் மட்டில் அதிக அக்கறை காட்டி வந்தார்.

புதிதாக சேர்ந்த சகோதரர் ஒருவர், தன்னை பிரான்சிஸ் அதிகம் நேசிப்பதில்லை என்றும், தன்னை சபையைவிட்டு வெளியேற்றி விடுவார் என்றும் நினைத்து மிக வருத்தமுற்றார். இதை உணர்ந்த பிரான்சிஸ்,அவரை அழைத்து “சகோதரரே நான் அதிகமாக அன்பு செய்பவர்களில் நீயும் ஒருவர். எப்பொழுதெல்லாம் உனக்குத் துன்பம் வருகின்றதோ அப்பொழுதெல்லாம் என்னிடம் வந்து பேசு” என்று கூறி அனுப்பினார். அப்புதுச் சகோதரர் வெகுவாய் மகிழ்வுற்றார்.

ஒரு நாள் இரவு ஒரு சகோதரர், “நான் சாகப் போகிறேன்... நான் சாகப் போகின்றேன்” என்று புலம்பினார். “யார் அப்படிக் கூறியது” எனக் கேட்க “நான்தான்” என ஒரு சகோதரர் முன்வந்தார். “என்ன வேண்டும் சகோதரா” என்று அவர் கேட்க, “நான் பசியால் சாகின்றேன்” எனச் சொன்னார். உடனே பிரான்சிஸ் அச்சகோதரர் முன் நல்ல உணவை வைத்து உண்ணச் சொன்னார். மேலும் அவர் வெட்கப்படக்கூடுமென நினைத்து, தானும் அவரோடு உண்டார்.

ஒரு சமயம் பிரான்சிஸ் ஒரு நோய்வாய்ப்பட்ட சகோதரரைத் திராட்சைத் தோட்டத்திற்கு அழைத்துக் கொண்டு சென்று ஓரிரு திராட்சைக் கொத்தை அவர் சாப்பிடக் கொடுத்தார். அவர் வெட்கப்படாதவண்ணம் பிரான்சிசும் அவரோடு சாப்பிட்டார். சகோதரர்களுக்குள் பிறர் சிநேகத்தைச் சிறப்பாகக் கையாண்டு வந்தனர்.

ஒரு நாள் இரு சகோதரர்கள் ஒரு போக்கிரியால் தாக்கப்பட்டனர். அப்போது ஒருவர் மாற்றி ஒருவராக முன்வந்தனர். காரணம் போக்கிரி எறிந்த கல் தன்மீதுதான் படவேண்டும் என்று அவர்கள் விரும்பினர்.

தொடரும்...

**கேள்வி எண் 12:**

1) **யார் தன்னை பிரான்சிஸ் அதிகம் நேசிப்பதில்லை என நினைத்தது?**
2) **சகோதரர்களுக்குள் பிறர் சிநேகம் சிறப்பாகக் காணப்பட்ட சந்தர்ப்பம் ஒன்று தருக?**

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 25.11.2013**

**புனித பிரான்சிஸ் அசிசியின் தொடருக்கான விடைகளை எழுதி பாராட்டைப் பொறுபவர்கள்.**

1) J.D. எஞ்ஜலினா, தரம் 6, சதாசகாய மாதா மறைப்பாடசாலை, பாரக்கடுவ (இரத்தினபுரி).
2) அரேத்தா விக்கோரியா, தரம் 7F, திருக்குடும்ப கன்னியர் மடம், கொழும்பு –4.
3) D.வருண் பிரகாஸ், தரம் - 9A, கெ/தெஹி/ புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம், யட்டியாந்தோட்டை.
4) ஷாமினி சிமியோன், தரம் - 7F, திருக்குடும்ப கன்னியர் மடம், பம்பிலப்பிட்டிய.

# நினைவாற்றலை வளர்த்துக் கொள்வது எப்படி?

★ நான் மிக மோசமான நினைவாற்றலைக் கொண்டவன்.
★ நான் ஞாபக சக்தி மிகவும் குறைவாக உள்ளவன்.
★ படித்தது எனக்கு ஞாபகத்திற்கு வருவதில்லை.
★ நினைவாற்றலில் நான் மற்றவர்களோடு ஒப்பிடுகையில் பின் தங்கியுள்ளேன்.



இது போன்ற கருத்துக்கள் உங்களிடமும் இருக்கலாம். ஆம் எனில், ஓர் அறிவியல் பூர்வமான உண்மையை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். எந்த மனிதனுக்கும் குறைந்த அளவு ஞாபக சக்தி, அதிக அளவு ஞாபக சக்தி என்பதை வகுத்துக் கூற இயலாது. ஒவ்வொருவரும் அதை எப்படி பயன்படுத்துகிறார்களோ அவ்வாறு அவர்களுடைய நினைவாற்றல் அமைகிறது.

உதாரணமாக : நினைவாற்றலை ஒரு நூலகத்தோடு ஒப்பிடுவோம். அதில் எவ்வாறு குறிப்பிட்ட ஓர் இடத்தில் பல ஆயிரக்கணக்கான புத்தகங்களை வைத்திருந்தாலும் நமக்குத் தேவையான ஒரு புத்தகத்தை எடுக்க முடியுமோ, அதுபோல் நம் நினைவாற்றலை தேவையான முறையில் பயன்படுத்த முடியும்.

**எப்படி?**

நூலகத்தில் "index" என அழைக்கப்படும் முறையின் மூலமாக புத்தகங்கள் வரிசைப்படி அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். அதுபோல் நம் நினைவில் உள்ள விஷயங்களை சரியாகப் பாகுபடுத்தினால் அவற்றை ஞாபகப்படுத்திக்கொள்ள எளிதாய் இயலும்.

## நினைவாற்றலை வளர்த்துக் கொள்ள சில வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும். அதைப் பற்றி ஒவ்வொன்றாகப் பார்ப்போம்.

**1) கற்றல் மற்றும் மனப்பாடம் செய்தல் :**

நாம் பாடங்களைப் படிக்கின்றபொழுது, அவற்றின் பொருளை நன்றாகப் புரிந்து கொண்டு படிக்க-வேண்டும். புரிந்து கொண்டு படிப்பதே நம் நினைவில் ஆழமாகப் பதியும். நமக்குத் தேர்விலும் பயன்படும். புரிந்து கொள்ளாமல் படித்தால் அது உடனே மறந்து போய்விடும். ஆகையால் பயனில்லை. அதேபோல நாம் ஆர்வத்துடன் படித்தால் அவை நீண்ட நாளுக்கு நம் நினைவில் இருக்கும். ஆர்வமில்லாமல் படிப்பவையும், புரிந்துகொள்ளாமல் படிப்பதைப்போன்று மறந்து போய்-விடும். எனவே படிப்பில் ஆர்வம் தேவை.

**2) நினைவிலிருத்தல் :**

நாம் படித்தவற்றை நம் நினைவில் ஆழ்படியும் படி நிறுத்தி வைத்தலே நினைவிலிருத்தல் ஆகும். நன்றாகப் பொருளுணர்ந்து படித்தால் நினைவிலிருத்தல் தானாக நிகழும்.

**3) நினைவுக்கழைத்தல் :**

நாம் படித்த பாடங்களை அவ்வப்பொழுது நம் நினைவுக்குக் கொண்டுவர வேண்டும். நாம் படித்தவை பதிந்து உள்ளதா என்பது இவ்வாறு செய்து பார்க்கும் பொழுது தெரிந்துவிடும். இப்படிச் செய்தால் நாம் பரீட்சையை நன்றாக எழுத முடியும்.

**4) நினைவுகூர்தல் :**

நம் பாடங்களை நினைவுபடுத்திக் கொள்வது நினைவு கூர்தல் ஆகும். உதாரணமாக கணிதத் தேர்வு எழுதும்பொழுது அறிவியல் பாடம் நினைவில் வராமல் கணிதம் மட்டுமே நினைவில் வரும்படி குறுக்கீடுகள் இல்லாமல் நன்றாகப் படித்துக் கொள்ள வேண்டும்.

**5) மீண்டும் கற்றல் :**

தேர்வு சமயங்களில் புதியதாக ஒரு பாடத்தைப் படிப்பதுகூடாது. நாம் ஏற்கனவே படித்தவற்றை மீண்டும் படித்தால் நம் நினைவில் நன்றாகவே பதிந்துவிடும்.

## திறமையுடன் மனப்பாடம் செய்யும் முறை

**1) இடைவிட்டு கற்றலும் மொத்தமாக கற்றலும் :**

ஒரு பாடத்தை படிக்கும்போது அவற்றில் உள்ள வினா - விடைகளை தனித்தனிப் பிரிவாகப் பிரித்துக் கொண்டு, ஒவ்வொரு பிரிவாகப் படித்து முடித்த பின்பும் சிறிது நேரம் இடைவெளி விட்டு பின்பு படிக்க வேண்டும். ஒரே நேரத்தில் மொத்தமாகப் படித்தால் நினைவில் வைத்துக் கெள்வது கடினமா-கும். உடனடித் தேவைக்கு மட்டும் மொத்தமாகப் படிக்கலாம். ஆனால் இவை நீண்ட நாள்களுக்கு நம் நினைவில் நிற்காது. ஆனால் இடைவெளி விட்டுப் படித்தால் நீண்ட நாள்களுக்கு நம் நினைவில் பதிந்து இருக்கும்.

**2) முழுமையாக கற்றலும், பகுதியாக கற்றலும் :**

அதாவது நாம் சிறிய அளவில் உள்ள செய்யுளையோ அல்லது விடையையோ முழுமையாக கற்க இதுவே சிறந்ததாகும். மனப்பாடம் செய்வதற்கு இவ்விரு முறைகள் பயன்படுகின்றன. ஆனால் பெரிய அளவில் உள்ள செய்யுளையோ அல்லது விடைக-ளையோ பகுதி, பகுதியாகக் கற்றால் நன்றாக நினைவில் பதியும். மேலும் இவ்விரு முறைகளையும் சேர்த்துப் படித்தால் அதாவது முதலில் பகுதி, பகுதி-யாகப் படித்து விட்டுப் பிறகு முழுமையாகப் படித்-தால் நன்றாக மனப்பாடம் செய்ய இயலும். அதாவது நன்றாக நம் நினைவில் நிற்கும்.

**3) ஒப்பித்தல் முறை :**

இம்முறையில் நாம் கற்றவற்றை நாமே தொடர்ந்து பார்க்காமல் சொல்லிப் பார்க்கவேண்டும். இப்படிச் செய்யும்பொழுது பிழைகள் இருந்தால் அதை மாற்றிக் கொள்ளலாம். தனக்குத்தானே ஒப்பித்துப் பார்த்துக் கொள்ளும்பொழுது கடினமான பகுதிகளை முதலிலேயே தெரிந்து கொண்டு அதற்குத் தனிக் கவனம் செலுத்திப் படித்துக்கொள்ளலாம்.

**4) நினைவுக் குறிப்புக்கள் :**

கற்பவற்றை நாம் எளிதில் நினைவில் வைத்துக் கொள்ள நாம் கற்கும் செய்திகளுக்கு அல்லது விடைகளுக்கு அவற்றோடு தொடர்புடைய ஒரு பொருளையோ அல்லது எண்களையோ நினைவுக்-குறிப்புக்களாக எடுத்துக்கொண்டு படித்தால் நன்றாக நினைவில் இருக்கும். உதாரணமாக Vibgyor என்ற சொல் தெரிந்தால் போதும் நிறமாலை (வானவில் நிறங்கள்) நமக்குத் தெரிந்துவிடும். நினைவு என்பது நம்மிடம் உள்ள தனிச் சிறப்புத் தகுதியாகும். இதைச் சரியாக கைக்கொள்ளும்போது நம் குறையாய்த் தென்பட்ட பல விஷயங்கள் திருத்தப்பட்டு நினைவுத் திறன் சிறப்பாய் இருக்கும்.

## கேள்விக்குறி '?' உருவான வரலாறு

எழுத்து வடிவத்தில் நாம் பயன்படுத்தும் கேள்விக்குறி, 13ஆம் நூற்றாண்டில் உருவானதாக மொழி ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். "கேள்வி" என்ற வார்த்தை இலத்தீன் மொழியில் Questio என்று சொல்லப்படுகின்றது. இந்த வார்த்தையின் முதல் எழுத்தான "q"வையும், இறுதி எழுத்தான "o"வையும் ஒன்றன் கீழ் ஒன்றாகப் பொருத்தி, தற்போது நாம் பயன்படுத்தும் கேள்விக்குறி உருவாக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கணித்துள்ளனர். "q" என்ற எழுத்து, கேள்விக்குறியின் மேல் பகுதியில் காணப்படும் கொக்கி போன்ற அடையாளமாகவும், "o" என்ற எழுத்து கீழே வைக்கப்படும் புள்ளியாகவும் மாறியுள்ளன என்று மொழி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

எழுத்து வடிவங்களை ஆய்வு செய்யும் Cambridge பல்கலைக்கழக ஆய்வாளர் Chip Coakley என்பவர், சிரியா (Syriac) மொழியில் கேள்விக்குறி முதன் முதலில் எழுத்து வடிவில் பயன்படுத்தப்பட்டது என்பதைக் கண்டறிந்துள்ளார். ஒவ்வொரு மொழியிலும் கேள்விக்குறியின் பயன்பாடு மாறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக, இஸ்பானிய மொழியில் கேள்வி வாக்கியத்தின் ஆரம்பத்திலும், இறுதியிலும் கேள்விக்குறிகள் பயன்படுத்தப்படுகின்றது. ஆரம்பத்தில் வைக்கப்படும் கேள்விக்குறி நேராகவும் பயன்படுத்தப்படுகின்றன. நாம் வழக்கமாக பயன்படுத்தும் கேள்விக்குறியின் கண்ணாடி பிம்பம் போன்ற குறியீடு, அரேபிய மொழியிலும், பாரசீக மொழியிலும் பயன்படுத்தப்படுகின்றது.





# மாணவர் பக்கம்

தொகுப்பு :
மறையாசிரியர் பேணடேற் சாந்தி

## கத்தோலிக்க திருமறை

### தரம் (11) (க.பொ.த) மாணவர்களுக்கான மாதிரி வினாக்கள்

1. இறைவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறு-திகள் 2 தருக?
2. இஸ்ராயேல் மக்கள் வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குச் சென்ற பயணத்தில் இறைவன் அவர்களுக்கு அளித்த உணவையும், புதிய உடன்படிக்கையில் இயேசு நிறுவிய உணவையும் வெவ்வேறாகக் குறிப்பிடுக?
3. இறைதந்தை, கிறிஸ்து இயேசு தமது மகன் என வெளிப்படுத்திய சந்தர்ப்பங்கள் 2 எழுதுக?
4. இயேசு நோயாளரைக் குணமாக்கிய இரு முறைகளை எழுதுக?
5. பெந்தக்கோஸ்தே திருவிழாவின்போது, அங்கு காணப்பட்ட தூய ஆவிக்குரிய இரு அடையா-ளங்களை எழுதுக?
6. புனித லூக்கா நற்செய்தியில் காணப்படும் புகழ்ச்சிப் பாடல்கள் இரண்டின் பெயர்களைத் தருக?
7. திருச்சபையில் காணப்படும் செபத்தின் வகைகள் 2 தருக?
8. திருச்சபை திருவழிபாட்டில் அதி உன்னதமாக நடாத்தும் வழிபாடு எது?
9. கத்தோலிக்க திருமணத்திற்குள்ள தடைகள் 2 தருக?
10. இந்நாட்டில் போர்த்துக்கேயரின் ஆட்சிக்காலத்-தில் மறைபோதக பணிக்காக முதன் முதலாக வருகை தந்த மறைபோதகக் குழுக்கள் இரண்டின் பெயர்களைத் தருக?

2. 1. இந்நாட்டில் ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க விசுவாசத்தைப் பாதுகாக்க வழி-காட்டிகளாயிருந்த ஒரற்றோரியன் சபைக் குருக்கள் இருவரின் பெயர்களைத் தருக?
   2. போர்த்துக்கேய மறைபோதகப் பணி இந்நாட்டில் வெற்றிகரமாக நிறைவேற சாதகமாக இருந்த காரணிகள் மூன்று எழுதுக?
   3. கத்தோலிக்க விசுவாசத்தைக் காத்துக்கொள்ள உமது பங்கில் உம்மால் செயற்படுத்துக்கூடிய செயல்கள் ஐந்தினை 75 சொற்களில் விளக்குக?

3. 1. இயேசு தனிமையில் செபித்த சந்தர்ப்பங்கள் 3 தருக?
   2. "தூய மனத்தோர் பேறுபெற்றோர் அவர்கள் கடவுளைக் காண்பர்" இதன் கருத்தினை மூன்று உதராணங்கள் தந்து விளக்குக?
   3. இயேசு போதித்த எட்டுப் பேறுகளின் மூலம் உமது வாழ்கைக்கு பொருந்தும் கொள்ளைகள் ஐந்தினை சுருக்கமாக விளக்குக?

4. 1. பத்துக் கட்டளைகளில் அடங்கியுள்ள பிரதான படிப்பினைகள் இரண்டையும் எழுதுக?
   2. கத்தோலிக்க திருமறையின்படி எட்டாம் கற்பனையின் மூலம் நமக்குத் தரப்படும் படிப்பினைகள் மூன்று எழுதுக?
   3. பத்துக் கட்டளைகளைக் கடைப்பிடிக்கும் கிறிஸ்தவனாகிய நீர் பின்பற்றக் வேண்டிய நற்பண்புகள் ஐந்து எழுதுக?

5. 1. பரிசுத்த திருச்சபைக்குள் அனைத்துக் கிறிஸ்தவ விசுவாசிகளையும் இரு பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை யாவை?
   2. ஆன்மீக தலைவர்கள் மட்டில் பொதுநிலையின-ருக்குள்ள கடமைகள் மூன்று எழுதுக?
   3. கத்தோலிக்கத் திருச்சபையில் பொதுநிலை -யினரின் மறைதூதுப் பணி மூலம் (பக்திச் சபைகள்) ஆற்றப்படும் சேவைகள் ஐந்தினை விளக்குக?

6. 1. இயேசு திருத்தூதர்கள் பன்னிருவரைத் தேர்ந்து அனுப்பும்போது அவர்களுக்கு கொடுத்த அதி-காரங்கள் இரண்டு எழுதுக?
   2. புனித லூக்கா நற்செய்தி 9:3-6இல் குறிப்-பிட்டுள்ளபடி திருத்தூதர்களை தேர்ந்து அனுப்-பும்போது அவர்களுக்கு கூறிய அறிவுரைகள் மூன்று எழுதுக?
   3. திருப்பலியில் பங்குபற்றுவதன் மூலம் அமைதி-யின் தூதனாக, கிறிஸ்துவின் படிப்பினைகளைச் சமுதாயத்தில் எவ்வாறு பரப்புவீர் என்பதனை ஐந்து உதாரணங்கள் முன்வைத்து எழுதுக?

# "வீர மனிதன்" என்று அழைக்கப்படும் திருத்தூதர் புனித அந்திரேயா

அந்திரேயா என்ற சொல்லுக்கு "வீர மனிதன்" என்பது பொருள். இவர் பேதுருவின் அண்ணன். மீனவர். கலிலேயாக் கடற்கரையோரம் இவர் தொழிலில் ஈடுபட்டிருந்தார். ஏற்கனவே திருமுழுக்கு யோவானின் சீடராக இருந்தவர். இயேசுவை மெசியா என்று சுட்டிக்காட்டியவுடன் தம் தம்பியையும் அழைத்துக்கொண்டுபோய் இவர் இயேசுவின் சீடரானார். ஒருமுறை கிரேக்கர்கள் இயேசுவைப் பார்த்துப் பேச வேண்டும் என்று பிலிப்புவிடம் கேட்டபொழுது பிலிப்பு அந்திரேயாவிடம் இதைத் தெரிவிக்கின்றார்.

இவர் இயேசுவின் விண்ணேற்புக்குப்பின் துருக்கிக்குச் சென்று அவர்களிடமும் சித்தியர்களிடமும் மறைபரப்புப் பணி ஆற்றினார். பைசான்சியம் நகருக்குப் புனித ஸ்டாக்கிஸ் என்பவரை இவர் முதல் ஆயராகத் திருநிலைப்படுத்தினார். பின்னர் மாசிடோனியா, கிரீஸ் நோக்கிச் சென்றார். நீரோவின் கொடுங்கோல் ஆட்சியில் பத்ராஸ் என்ற ஊரில் தம் 60வது வயதில் கார்த்திகை 24ஆம் திகதி ஓ வடிவில் அமைந்த சிலுவை-யில் அறையப்பட்டு மறைசாட்சி முடிபெற்றார். ஓ வடிவிலான சிலுவை அவருக்கு மிகுந்த வேதனையைக் கொடுக்கும் என்று கருதி இவ்வாறு செய்தார்கள். இவர் இவ்வாறு அறையப்பட்டிருந்த வேளையிலே இரண்டு நாட்கள் மக்களுக்குப் போதித்தார். இவரது உடல் கொன்ஸ்டான்டி நோபிளுக்கு கொண்டு-வரப்பட்டது. திமோத்தேயு, லூக்கா இவர்களுக்கு அருகில் இவரை அடக்கம் செய்தார்கள். கி.பி 1210இல் சிலுவைப் போரில் ஈடுபட்ட கிறிஸ்தவப் போர் வீரர்கள் புனிதருடைய திருப்பண்டங்களைத் தென் இத்தாலியில் அமால்ஃபி என்ற நகரில் இன்று வரை புனிதமாக வைத்துள்ளனர். இவர் ரஷ்யா போலந்து நாடுகளுக்குப் பாதுகாவலர். இவர் கொலைக்களத்திற்கு இழுத்துச் செல்லப்பட்டபோது தொலைவிலேயே தமக்கு காத்திருந்த புனித சிலுவையை அடையாளம் கண்டு கொண்டு "எனக்காகத் தயாரிக்கப்பட்ட உன்னை (சிலுவையை) பல காலமாக எதிர்நோக்கி வாழ்ந்தேன். மகிழ்ச்சி ஆரவாரத்துடனும், நம்பிக்கையுடனும் உன்னை நெருங்கி வருகின்றேன். இதற்கு முன் என் ஆண்டவனை நீ சுமந்தாய் மகிழ்ச்சியுடன் என்னையும் ஏற்றுக்கொள்" என்று கூறினார் புனித அந்திரேயா.


கார்த்திகை 30



## இம்மாதத்தில் ✠ பேதுரு

# தெய்வம் எங்கே இருக்கின்றது

| | |
|---|---|
| புன்னகைக்குள் ஒளிந்திருக்கின்றது | நட்பு |
| போதும் என்பதில் ஒளிந்திருக்கின்றது | மகிழ்ச்சி |
| தரித்திரத்தில் ஒளிந்திருக்கின்றது | துறவு |
| தாங்கிக்கொள்வதில் ஒளிந்திருக்கின்றது | தலைமை |
| சரி என்பதில் ஒளிந்திருக்கின்றது | பணிவு |
| சபலத்தில் ஒளிந்திருக்கின்றது | துன்பம் |
| முடங்களில் ஒளிந்திருக்கின்றது | தோல்வி |
| முயற்சியில் ஒளிந்திருக்கின்றது | வெற்றி |
| சிக்கனத்தில் ஒளிந்திருக்கின்றது | செல்வம் |
| சீற்றத்தில் ஒளிந்திருக்கின்றது | வீழ்ச்சி |
| ஏற்பதில் ஒளிந்திருக்கின்றது | நேர்மை |
| எதிர்ப்பதில் ஒளிந்திருக்கின்றது | துணிவு |
| கட்டுப்பாட்டில் ஒளிந்திருக்கின்றது | ஒழுக்கம் |
| காத்திருப்பதில் ஒளிந்திருக்கின்றது | பாசம் |
| கல்வியில் ஒளிந்திருக்கின்றது | ஞானம் |
| கலைகளில் ஒளிந்திருக்கின்றது | இனிமை |
| தோல்வியில் ஒளிந்திருக்கின்றது | அனுபவம் |
| வெற்றியில் ஒளிந்திருக்கின்றது | உழைப்பு |
| மன்னிப்பதில் ஒளிந்திருக்கின்றது | மனிதம் |
| மறப்பதில் ஒளிந்திருக்கின்றது | உறவு |
| உழைப்பதில் ஒளிந்திருக்கின்றது | உயர்வு |
| ஒழுக்கத்தில் ஒளிந்திருக்கின்றது | பெருமை |
| நம்பிக்கையில் ஒளிந்திருக்கின்றது | வாழ்க்கை |
| நடத்தையில் ஒளிந்திருக்கின்றது | நற்குணம் |
| வீரத்தில் ஒளிந்திருக்கின்றது | அச்சம் |
| ஆண்மையில் ஒளிந்திருக்கின்றது | பெண்மை |
| இளமையில் ஒளிந்திருக்கின்றது | முதுமை |
| முதுமையில் ஒளிந்திருக்கின்றது | இளமை |
| தொடக்கத்தில் ஒளிந்திருக்கின்றது | முடிவு |
| முடிவில் ஒளிந்திருக்கின்றது | தொடக்கம் |
| நாஸ்திகத்தில் ஒளிந்திருக்கின்றது | ஆஸ்திகம் |
| ஆஸ்திகத்தில் ஒளிந்திருக்கின்றது | நாஸ்திகம் |
| இரவில் ஒளிந்திருக்கின்றது | பகல் |
| பகலில் ஒளிந்திருக்கின்றது | இரவு |
| வார்த்தையில் ஒளிந்திருக்கின்றது | மௌனம் |
| மௌனத்தில் ஒளிந்திருக்கின்றது | வார்த்தை |
| தெய்வத்தில் ஒளிந்திருக்கின்றது | மனிதம் |
| மனிதனில் ஒளிந்திருக்கின்றது | தெய்வம் |

# மரியாயின் ஆசீர்வாதம்



மரியாளின் அழகும் குல மகிமையும்
ஓ மரியே! வருக!
அழகோவியமான கன்னியான
இரத்தினமே! வருக!
எனது சரணமே! வருக!
எனது ஆறுதலே வருக! வருக!
உம் சந்நிதியில்
உம் குரலைக் கேட்கும்போது
நான் பூரண செல்வமுடையவனாகிறேன்
எல்லாத் தீமைகளிலிருந்தும்
பாதுகாப்புடையவனாகிறேன்
ஓ மரியே!
உனது இனிமையான கருணையை
நினைத்துக் கொண்டு உனது
அடைக்கலத்தையும், பாதுகாப்பையும்
நான் சார்ந்திருக்கின்றேன்
ஓ மரியே!
பலவீனமானவர்களுக்கு சக்தியும்,
ஒடுக்கப்பட்டவர்களின்
விடுதலையும் நீதானே!
உமது அளவற்ற இரக்கத்தாலும்
உமது எல்லையற்ற பாசத்தாலும்
நீ எனது தாயாக இருக்க வேண்டுமே!
ஓ மரியே!
உன்னை நம்பிக்கையுடன் வணங்குபவர்களுக்கு
நீ கொடுக்கிற ஆறுதல்
இதயத்திற்கு எத்துணை இதமானது!
உமது பாதுகாப்பு எத்துணை பலமானது
என்று அனுபவத்தால் நானும்
அறிந்து கொள்கிறேன்.

# உத்தரிக்கிற ஆன்மாக்களுக்கு உதவுவோம்!

நகரம் மோட்சம் இரண்டின் நடுவே
நிலையொன்றுள்ளது நாமறிவோமா?
நன்மைத்தனத்தில் முழுமை பெறாவிடில்
நமக்கது வாய்க்கும் நாமுணர்வோமா?
உலக வாழ்வில் பாவ நிலையினை
உதற முயன்று விழுந்தெழுவோர்க்கு
உதவ இறைவன் மனமிரங்கி யருளிய
உத்தரிப்பு நிலையினை நாம் தெரிவோமா?

மோட்சம் என்பது அலகையின் சூழ்ச்சிக்கு
மோசம் போகாதோர் அடைகின்ற வீடு
நகரம் என்பது பாவமே வாழ்வாய்
நடந்தவர் பெறுகின்ற நித்திய தீக்காடு
மீட்சியடைய திருச்சபை வழங்கிய
உத்தரிப்பு ஸ்தலமே இடைநிலைக்கோடு
மரித்தோர் ஆன்மாக்கள் விண்ணகம் சேரும்
வழியினை மன்றாட்டின் மூலமே தேடு!

விவிலியம் கூறும் அடிப்படையிலேதான்
மறுவாழ்வு ஒன்று உண்டென நம்பினோம்
வீரன் யூதா மக்கபேயு காலத்தில்
இறந்தோருக்காக செபிக்கத் தொடங்கினோம்.
புவிமிசை வாழும் மானிடர் பக்தியாய்
'போனவர்'களுக்காகப் பலி ஒப்புக்கொடுத்தோம்
புரிந்து கொள்வோம். இன்று நாமிதைச் செய்தால்
பின்னர் தண்டனையின் கடுமையில் தப்புவோம்

இறந்தோர் ஆன்மாக்கள் ஈடேற்றம் பெறுகின்ற
இன்னரும் நிலைக்காய் செபிப்பது தொடர்வோம்
இறந்தவர் பெயரில் பலி ஒப்புக்கொடுத்து
திருப்பலியின் முழுமையில் இணைவோம்
மறந்திட வேண்டாம் மரித்தோருக்காக
மண்ணில் வாழும் நாம் அனுதினம் செபிப்பதை
மன்றாட்டு திருப்பலி, புண்ணியங்களால் மீட்வோம்
உத்தரிப்பு நிலையில் ஆன்மாக்கள் தவிப்பதை!



✍. ஆல்பர்ட்

# சிந்திக்க சில நொடிகள்....

★ பல முறை ஜெயித்தவன் ஒரு முறை தோற்றால்
அது 'விசித்திரம்'..!!

பல முறை தோற்றவன் ஒரு முறை ஜெயித்தால்
அது 'சரித்திரம்'..!!!

★ நல்ல மனிதன் விவாதத்தில் ஈடுபடுவதில்லை. விவாதத்தில் ஈடுபட்டு காலத்தை கழிப்பவன் நல்ல மனிதனாக இருக்க முடியாது – லாட்ஜோ

★ நீ நடந்து போக பாதை இல்லையே என்று கவலைப்படாதே
நீ நடந்தால் அதுவே ஒரு பாதை – ஹிட்லர்

★ புத்தகக் கடையில் புரட்டி புரட்டி பார்த்து வாங்குவது நல்ல புத்தகம் இல்லை...

எந்த புத்தகம் உன்னை புரட்டி போட வைக்கிறதோ அதுவே சிறந்த புத்தகம்...!!!

★ தோல்வி உன்னை துரத்துகின்றது என்றால் நீ வெற்றியை நெருங்குகின்றாய் என்று அர்த்தம்

# இன்றைய குழந்தைகள் நாளைய திருச்சபை



# மாசில்லாத ஆன்மாவைக் காப்போம்!

எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் இம்மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவராவதும், தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற தத்துவப் பாடல் ஒன்றிலே நாம் வாசிக்கின்றோம். எனவே, ஒவ்வொரு குழந்தையும் நல்லவராக மாற வேண்டுமா? அல்லது ஒழுக்கமுள்ள கடவுள் பக்தியுள்ள ஊரார் போற்றும்படி நல்வாழ்க்கை வாழ வேண்டுமா?

இது மிகவும் எளிது அந்தக் குழந்தையின் ஆன்மாவை நாம் மாசுபடாமல் காக்க வேண்டும். எனவே குழந்தைகளின் ஆன்மாவை கறைபடாமல் காக்க வேண்டியது பெற்றோரின் கடமையாக இருக்கின்றது. ஆன்மாவைப் பற்றிய நம்முடைய திருச்சபையும் திருவிவிலியமும் என்ன சொல்கிறது என்பதை இங்கு சுருக்கமாக காண்போம்.

## விவிலியத்தில் ஆன்மா

பழைய ஏற்பாட்டில் திருப்பாடல்கள், சாலமோனின் ஞானம் யோபு, மற்றும் பாருக்கு போன்ற இறைவாக்கினர்கள் பகுதியில் ஆன்மாக்களை பற்றிய ஒரு சில குறிப்புகளை பார்க்கின்றோம். ஆனால் அவையெல்லாம் எவ்வாறு மனிதன் தன் ஆன்மாவோடு இறைவனைப் புகழ வேண்டும் என்பதைப் பற்றியே குறிப்பிடுகின்றன. மேலும், ஆன்மாவின் வேலை நம்மை ஆண்டவரிடம் அழைத்துச் செல்வதாக இருக்காது என்பதையும் எடுத்தியம்புகிறது.

புதிய ஏற்பாட்டிலே ஆன்மாவைப் பற்றிய ஒரு மாறுபட்ட கண்ணோட்டம் காண்பிக்கப்படுகிறது...

★ "ஆன்மாவைக் கொல்லாமல், உடலை மட்டும் கொல்பவர்களுக்கு அஞ்ச வேண்டாம். ஆன்மாவையும் உடலையும் நரகத்தில் அழிக்க வல்லவருக்கே அஞ்சுங்கள். என்று இயேசு மத்தேயு 10:28 இல் குறிப்பிடுகிறார்.

★ எபிரேயர் 4:12இல் "இறைவார்த்தை ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவிற்கு குத்தி ஊடுருவுகின்றது" என்பதை அறிகிறோம்.

★ 1 தெச 5:23இல் "ஆண்டவர் உங்கள் உள்ளம், ஆன்மா, உடல் அனைத்தையும் குற்றமின்றி காப்பாராக" என்றும் எழுதுப்பட்டுள்ளதை நாம் கவனிக்கின்றோம்.

எனவே புதிய ஏற்பாட்டில் ஆண்டவர் ஆன்மாவை மாசுபடாமல் காக்க வல்லவராக காண்கின்றோம். இவ்வுலகில் வாழும் அவரது பிரதிநிதிகள் மூலம் அவர் இதைச் செய்கிறார் என்றும் நாம் அறிகிறோம்.

எனவே

★ *ஆன்மா ஆண்டவரால் படைக்கப்பட்டது*

★ *ஆன்மா ஆண்டவரை நோக்கி பயணிக்கின்றது*

★ *ஆன்மாவை நாமும், நம்மோடு வாழும் சகோதர - சகோதரிகளோடு, பெற்றோர், உற்றார் உறவினரோடு சேர்ந்து மாசுபடாமல் காக்க இறையாசீர் நம்மோடு தங்கும்.*

## திருச்சபையின் விளக்கங்கள்

**கத்தோலிக்க திருச்சபையின் மறைக்கல்வி எண் 362**

"மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் கடவுளைச் சார்ந்த எண்ணங்களால் ஈர்க்கப்படுகின்றனர். இதற்கு அதி-முக்கியமாக உதவி செய்வது மனிதனின் ஆன்மாதான்.

CCC 363, மனிதனின் ஆன்மா இல்லாமல் அவன் முழுமையடைவதில்லை.

CCC 382 நம்முடைய நம்பிக்கைதான் ஆன்மாவை அழிவுபடாமல் காத்து, இறைவனை நோக்கி எரிந்து கொண்டிருக்கும் பிரகாசமான ஒளியாக இருக்கச் செய்கிறது.

CCC 366 மனிதனின் ஆன்மா இறைவனால் படைக்கப்பட்டது என்றாலும், அதைப் பாதுகாப்பதும், அழியாமல், மாசுபடாமல், இவ்வுலகத்தில் வழிநடத்துவதும் பெற்றோர்கள், ஆசிரியர்கள், உற்றார் உறவினர்கள், நண்பர்கள் மற்றும் ஒவ்வொரு மனிதருடைய அதிமுக்கிய பணியாக இருக்கின்றது.

இந்த ஆன்மாவிற்கு அழிவு கிடையாது. நாம் இறக்கும்போது நாம் வாழ்ந்த வாழ்க்கையின் மூலமாக இந்த ஆன்மாவிற்கு வெகுமதியோ அல்லது தண்டனையோ வழங்கப்படுகின்றது.

★ ஆன்மா இன்றி நம் மனித வாழ்க்கை முழுமையடைவதில்லை

★ ஆன்மாவிற்கு அழிவில்லை

★ இந்த அழிவில்லாத ஆன்மாவை நாம் ஒவ்வொருவரும் காக்க வேண்டும்

## நல்ல தொடக்கம் தேவை

ஆன்மாவின் அத்தியாவசியத்தை உணர்ந்து கொண்ட நாம், அதை மாசுபடாமல் காத்தருள வேண்டும் என்பதையும் அறிந்து கொண்டோம். சிறுகுழந்தைகள் எவ்வாறு இதைச் செய்ய முடியும்.

ஆன்மாவைப் பற்றிய அறிவு : வளர்ந்து வரும் மேலைநாட்டு மோகம் உடலுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றது. ஆன்மா இறைவன் போன்றவற்றைப் பின்னுக்கு தள்ள நினைக்கின்ற இந்த காலகட்டத்தில் ஆன்மாவைப் பற்றியும், இது இறைவனை நோக்கி மட்டுமே செல்ல வேண்டும் என்பதை நம் குழந்தைகளுக்க கற்பிக்க வேண்டும்.

ஆ) ஆன்மா இறைவனுக்குரியது என்ற விழிப்புணர்வு : குழந்தைகள் கெட்ட பழக்க வழக்கங்களை, கெட்ட சிந்தனை, சொல், செயலிலே ஈடும்படும்போது வெறுமனே கண்டிப்போடு மட்டும் நின்றுவிடாமல், ஆன்மாவின் அழிவினையும் ஆன்மாவின் நோக்கத்தையும் நம் பாவங்கள் அனைத்தும் ஆன்மாவை அடைய விடாமல் செய்து விடுகின்றன என்பதையும் கற்பிக்க வேண்டும்.

இ) ஆன்மா மீட்படைவதற்கு ஏற்ற வழிகளை நாம் உருவாக்க வேண்டும்.

- சிறு குழந்தைகளை, சிறுவயதிலிருந்தே செபம்,செபமாலை, திருப்பலி, ஆராதனை மற்றும் இறை காரியங்களில் ஆர்வம் உடையவர்களாக வளர்க்க வேண்டும்.

திருவருட்சாதனங்களை தகுந்த நேரத்தில் வழங்குவதற்கும் கவனம் செலுத்த வேண்டும்

ஆன்மா கறைபடும் போதேல்லாம், சிறு பாவமாக இருந்தாலும் ஒப்புரவு அருட்சாதனத்தைப் பயன்படுத்தி பாவமன்னிப்பு பெற்றுக்கொள்ளவும், ஆன்மாவை சுத்திகரித்துக்கொள்ளவும், குழந்தைகளை நாம் தயார் படுத்த வேண்டும்.

இறையச்சம், ஒழுக்கம் நல்ல பண்புகள் ஆன்மாவை சீர்ப்படுத்தும் என்பதை உணர வைக்க வேண்டும்.

- சிறு குழந்தைகள் மனதில் ஆன்மாவை பற்றிய விசுவாச விதைகளை விதைத்தால் பசுமரத்து ஆணிபோல பதிந்து விடும். எனவே, கண்டிப்பாக இவர்கள் தன்னுடைய ஆன்மாவைத் தொலைத்து விடாமல் காப்பாற்றிக் கொள்ளவார்கள்.

> "இறைவார்த்தை ஆன்மாவையும் ஆவியையும் பிரிக்கும் அளவிற்கு குத்தி ஊடுருவுகின்றது"

# நம்பிக்கை மன்றாட்டு

அருட்பணி. மா. றேஜிஸ் இராசநாயகம்



## பிரபஞ்சத்தைப் படைத்த இறைவனிலிருந்து :

நான் உருவான பிரபஞ்சத்தின் ஒளியிலிருந்து
நான் உருவான பிரபஞ்சத்தின் அன்பிலிருந்து
நான் உருவான பிரபஞ்சத்தின் சக்தியிலிருந்து
நான் உருவான பிரபஞ்சத்தின் இதயத்திலிருந்து

நான் உறுதியுடன் கூறுகிறேன் -

எல்லையற்ற வளங்களின் நடுவில் நான் வாழ்கிறேன். பிரபஞ்சத்தின் பெருவளமே எனது அளவற்ற மூலவளமாகும்.

வாழ்வெனும் நதி ஓய்ந்து நிற்பதில்லை. அது என்னூடாகப் பாய்ந்து பெருவெள்ளமாக வெளிப்படுகின்றது. எதிர்பாராத வழிகளில் நன்மை, என்னை வந்தடைகின்றது. இறைவன் தன் எண்ணற்ற செயற்பாடுகளால் என்னை ஆசீர்வதிக்கின்றார்.

இப்போது நான் எனக்கு வரும் நன்மைகளைப் பெற்றுக்கொள்ள என் மனதைத் திறந்து வைக்கிறேன். உண்மையிலேயே அடைய முடியாத நன்மை ஒன்றுமேயில்லை. நிகழ முடியாத அற்புதம் ஒன்றுமேயில்லை.

இறைவனே எனது அடிப்படையாக இருப்பதால் எனக்கு வியப்பைத் தருவது எதுவுமேயில்லை.

இறந்தகாலத்தையோ எதிர்காலத்தையோ பற்றிய எண்ணங்கள் என்னை அழுத்துவதில்லை. ஒன்று கடந்து போய்விட்டது. மற்றது இன்னும் வரவில்லை. அச்சமற்ற செயற்பாடுகளுடன்கூடிய நோக்குடனும், இறைவனோடு நான் கொண்டுள்ள ஆழ்ந்த ஒத்திசைவுடனும் கூடிய எனது நம்பிக்கையின் சக்தியினால் எனது எதிர்காலம் உருவாக்கப்படுகின்றது. எனது நிறைவளம் வெளிப்படுத்தப்படுகிறது.

இவ்வேளையிலும் ஒவ்வொரு கணமும் இன்னும் மேலான உண்மை நிலைக்கு நான் உயர்த்தப்படும்படியாக வேண்டுகிறேன். அதனை ஏற்றுக்கொள்கிறேன். எனது மனம் அமைதியுடன் இருக்கின்றது.

இன்று முதல் என்னை சுதந்திர வாழ்வுக்கும் அச்சமில்லாமைக்கும் அர்ப்பணிக்கின்றேன். வாழ்வானது எனக்கு அளவற்ற வளங்களுடன் திருப்பித் தரப்படுகின்றது. எதிர்பார்த்த விதத்திலும் -ஆசீர்வாதங்கள் கிடைக்கின்றன. இறைவன் அற்புதமான விதங்களில் எனக்கு வாரிவழங்கிக் கொண்டே இருக்கின்றார்.

அதற்காக, நான் மிகுந்த நன்றி உடையவனாய் இருக்கிறேன். அது அவ்வாறே என்றும் இருப்பதாக.

குறிப்பு:

**இது இணையத்தளத்திலிருந்து பெறப்பட்ட ஆங்கில செபத்தின் தழுவல். இந்தச் செபம் எனக்கு மிகுந்த பயனைத் தந்துள்ளது. உங்களுக்கும் அவ்வாறு பயன்படும் என நம்புகிறேன்.**




# பாத்திமாவின் மூன்றாவது இரகசியத்தின் கையெழுத்துப் பிரதி விரைவில் அருங்காட்சியகத்தில்...



போர்த்துக்கல் நாட்டு பாத்திமாவின் மூன்றாவது இரகசியத்தின் கையெழுத்துப் பிரதி விரைவில் அருங்காட்சியத்தில் வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1917ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் ஜசிந்தா, லூசியா, பிரான்சிஸ் ஆகிய மூன்று சிறாருக்கு பாத்திமாவில் அன்னை மரியா அறிவித்த மூன்றாவது இரகசியத்தை விளக்கும் அருட்சகோதரி லூசியாவின் கையெழுத்துப் பிரதி இம்மாதம் 30ஆம் திகதியன்று பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

1957ஆம் ஆண்டு முதல் இந்த பிரதி வத்திக்கானில் விசுவாசக்கோட்பாட்டுப் பேராயத்தின் சுவடிக்கூடத்தில் வைக்கப்பட்டுள்ளது. இப்பிரதி இதுவரை இரண்டு தடவைகள் இப்பேராயத்தைவிட்டு வெளியே கொண்டுவரப்பட்டுள்ளது.

1981ஆம் ஆண்டில் முத்திப்பேறு பெற்ற திருத்தந்தை 2ஆம் ஜோன் போல் அவர்கள் துப்பாக்கியால் சுடப்பட்ட பின்னர் அத்திருத்தந்தையின் வேண்டுகோளின்பேரில் இது முதலில் வெளியே கொண்டுவரப்பட்டது. அதன்பின்னர், கர்தினால் ஜோசப் இரட்சிங்கர் (முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட்) அவர்கள், 2000ஆம் ஆண்டில் போர்த்துக்கல் நாட்டு கொயம்ப்ராவில் அருள்சகோதரி லூசியாவைச் சந்தித்தபோது, இது உண்மையில் அச்சகோதரியின் கையெழுத்துப் பிரதிதானா என்பதை உறுதி செய்வதற்காக அவர் இதனை எடுத்துச்சென்றார்.

# புனிதப் பேதுருவின் புனித பொருள்கள் பார்வைக்கு



கத்தோலிக்கத் திருச்சபையின் நம்பிக்கை ஆண்டு நிறைவுறவிருக்கும் வேளையில் உரோமின் முதல் ஆயராகிய புனித பேதுருவின் புனிதப் பொருள்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படும் என, நற்செய்தியை பதிய வழியில் அறிவிப்பதை ஊக்குவிக்கும் திருப்பீட அவைத் தலைவர் பேராயர் Rino Fisichella அறிவித்துள்ளார்.

முதல் கிறிஸ்தவர்களின் விசவாசத்தை இக்காலத்தில் விசவாசிகள் மத்தியில் பொதுமக்களின் மீண்டும் உயிர்பெறச் செய்யும் நோக்கத்தில் புனித பேதுருவின் புனிதப் பொருள்கள் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படவுள்ளது.

நம் ஆண்டவருக்காகத் தனது வாழ்வை அர்ப்பணித்த திருத்தூதர் புனித பேதுருவின் புனிதப் பொருள்கள் என பாரம்பரியமாக நம்பப்பட்டுவரும் அவற்றை, நம்பிக்கை ஆண்டை நிறைவு செய்யும் உச்ச நிகழ்வாக, முதன் முறையாக இவை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது எனவும், முன்னாள் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்களால் 2012ஆம் ஆண்டு ஐப்பசி 11ஆம் திகதி தொடங்கப்பட்ட நம்பிக்கை ஆண்டு, 2013ஆம் ஆண்டு நவம்பர் 24ஆம் திகதியன்று நிறைவடையும் என்றும் கூறினார் திருப்பீடத் தலைவர்.

# 2014ஆம் ஆண்டு பெப்ரவரியில் புதிய கர்தினால்கள் அவை

புதிய கர்தினால்களை உருவாக்கும் Consistory என்ற கர்தினால்கள் அவை 2014ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 22ஆம் திகதி, புனித பேதுருவின் தலைமைப்பீட விழாவன்று இடம்பெறும் என்று திருப்பீடம் அறிவித்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இது குறித்து கர்தினால்கள் ஆலோசனை அவைக்கும், ஆயர்கள் மாமன்ற அவைக்கும் ஏற்கனவே அறிவித்துள்ளார் எனத் தெரிவித்த திருப்பீட பேச்சாளர் இயேசு சபை அருட்தந்தை பெதரிக்கோ லொம்பார்த்தி, இப்படி ஏற்கனவே அறிவித்திருப்பது உலகெங்கும் இருக்கின்ற கர்தினால்களை ஈடுபடுத்தும் மற்ற கூட்டங்களைத் திட்டமிட உதவும் என்று கூறினார்.

அதேநேரம் திருஅவையின் நிர்வாகம் மற்றும் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து ஆய்வு செய்யும் 15 பேர் கொண்ட கர்தினால்கள் அவைக்கூட்டம் வழக்கம்போல பிப்ரவரியில் நடைபெறும் எனவும் அருட்தந்தை லொம்பார்தி தெரிவித்தார்.

தற்போது கத்தோலிக்கத் திருச்சபையிலுள்ள மொத்த கர்தினால்கள் எண்ணிக்கை 201 (அக். 19, 2013). இவர்களில் திருத்தந்தையர்களைத் தேர்ந்தெடுக்கும் கான்கிளேவ் அவைக்கு அதிகபட்சம் 120 கர்தினால்கள் தேவை என திரு அவை சட்டம் கூறுகிறது.

# அன்னை திரேசா விருது

## அடிமைக் குழந்தைகளின் விடுதலைக்காக உழைத்தவருக்கு அன்னை திரேசா விருது



சூடானிலும் உகண்டாவிலும் குழந்தைகள் அடிமைகளாக நடத்தப்படுவதற்கு எதிராகப் போராடிவரும் அமெரிக்க கிறிஸ்தவரான Sam Childers அவர்களுக்கு இவ்வாண்டின் அன்னை திரேசா விருது வழங்கப்பட்டுள்ளது. மும்பையில் இடம்பெற்ற விழாவில் இவ்விருதை Harmony என்றழைப்படும் அமைப்பிடமிருந்து பெற்றபோது உரையாற்றிய Childers அவர்கள், அன்னை திரேசாவின் பாதையைப் பின்பற்றும் தான், சூடானிலும், உலகின் பல்வேறு பகுதிகளிலும் துன்புறும் சிறார்களின் சார்பா இவ்விருதை ஏற்றுக்கொள்வதாகக் கூறினார். தொடக்க காலத்தில் போதைப்பொருட்களுக்கு அடிமையாகி, வன்முறைகளை ஆதரித்து வந்த Childers அவர்கள், மனம்மாறி கிறிஸ்தவத்தை தழுவிய பின்னர் , கடந்த 13 ஆண்டுகளாக ஆப்ரிக்காவில், குறிப்பாக சூடான் மற்றும் உகண்டாவில் அடிமைக் குழந்தைகளின் விடுதலைக்காக உழைத்து வருகிறார்.

# இதய இரத்த நாளங்களில் உள்ள அடைப்பை, குறைந்த அளவில் கண்டறிய புதிய மருத்துவக் கருவி

இதய இரத்த நாளங்களில் அடைப்புத்தன்மையை குறைந்த செலவில் கண்டறியக் கூடிய ஒரு கருவியை சென்னை ஐ.ஐ.டி கல்வி நிறுவனத்தின் மருத்துவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையமான நல்வாழ்வு தொழில்நுட்ப கண்டுபிடிப்பு மையம் உருவாகியுள்ளது.

குறைந்த செலவில் நவீன மருத்துவச் சாதனங்களை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள இந்த மையம், "ஆர்ட்சென்ஸ்" (Heart Sence) என்ற பெயரில் இக்கருவியை உருவாக்கியுள்ளது.

தற்போதைய நடைமுறையில் இத்தகைய ஆய்வுக்கு ரூ. 10 ஆயிரம் வரை செலவாகும் சூழலில் இந்தப் புதியக் கருவியின் மூலம் ஆயிரம் ரூபாய்க்குள் ஆய்வை முடித்துவிடலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஐ.ஐ.டி வடிவமைத்துள்ள இந்தப் புதியக் கருவியில் சில நிமிடங்களில் சோதனை முடிந்து விடும். இது குறித்து ஐ.ஐ.டி நல்வாழ்வு தொழில்நுட்ப கண்டுபிடிப்பு ஆய்வு மையத்தின் பொறுப்பாளர்கள் மோகனசங்கர், ஜெயராஜ் ஜோசப் ஆகியோர் இவ்வாறு கூறினர்.

குறைந்த செலவில் குறுகிய நேரத்தில் இருதய ரத்த நாளங்களின் அடைப்புத்தன்மையை கண்டறிய உதவும் இந்தக் கருவியைப் பயன்படுத்துவது மிகவும் எளிது. அடுத்த கட்டமாக, இக்கருவியை கையடக்க கருவியாக வடிவமைக்க திட்டமிட்டுள்ளோம்" என்றனர்.

ஐ.ஐ.டி இயக்குனர் பாஸ்கர் ராமமூர்த்தி கூறுகையில் "இன்றைய சூழலில் மருத்துவம் - தொழில்நுட்பம் ஒருங்கிணைந்த படிப்புகளை வழங்கக் கூடிய கல்வி நிறுவனங்கள் அவசியம். சென்னை ஐ.ஐடி யில், மருத்துவம், கட்டுமானம், நீர் மரபுசாரா எரிசக்தி, ஆகியவற்றுக்கும் தொழில் நுட்பத்துக்கும் இடையேயான ஆராய்ச்சி பணிகள் நடந்து வருகின்றன" என்று கூறினார்.

# மருத்துவக் குறிப்புகள்



## ஆஸ்த்துமாவை விரட்டும் வெல்லம்

சோகைக்கு தீர்வு நம் வீட்டு சமையல் அறையிலேயே இருக்கிறது என்பது ஆச்சரியமாக இருக்கிறதா? ஆம், வெல்லத்தில் இரும்புச் சத்து அதிகம் இருப்பதால் இரத்த சோகைக்கு மிகவும் நல்லது. தவிர இதிலுள்ள சத்துக்கள் பொட்டாஷியம், சோடியம், கால்சியம், பாஸ்பரஸ், மற்றும் ஜிங்க் ஆகும். வெல்லத்தில் மினரல்சும் அதிகம் இருப்பதால் சத்துணவாக இது அமைந்துள்ளது. இதில் மேக்னிசியம் இரப்பதால் நரம்பு மண்டலத்தை உறுதிப்படுத்தும் தசைகளை ரிலாக்ஸ் செய்யும். எலுமிச்சை சாறு பிழிந்து அதில் வெல்லத்தை தட்டிப்போட்டு பருகினால் உடனடியாக சோர்வு நீங்கி உடல் புத்துணர்ச்சி அடையும். பொதுவாக அஸ்கா சர்க்கரை உட்கொள்ளும்போது அதிலுள்ள சத்துப் பொருட்கள் உடனடியாக உடலில் சேர்ந்துவிடும். ஆனால் வெல்லம் சத்துக்களை உடலில் தேக்கி வைத்து தேவைப்படும் போது தகுந்த பயனை அளிக்கும். சித்த மருத்துவத்தில் சில வியாதிகளுக்கு மருந்து தயாரிக்க வெல்லத்தைப் பயன்படுத்துவார்கள்



பெண்களுக்கு மாதவிடாய் பிரச்சினையின் போது உடல் சோர்வாகவும், காரணமின்றி படபடப்பாகவும் இருக்கும். சிலருக்கு தலைசுற்றலும் இருக்கம் அந்நிலையில் வெல்லம் சாப்பிட சரியாகிவிடும்.

ஒவ்வாமையால் ஏற்படும் ஆஸ்துமா நோய்க்கு வெல்லம் ஒரு வரப்பிரசாதம். வெல்லம் ஒரு ஆன்டி அலர்ஜித் என்று பலருக்கும் தெரியாது.

பித்தம், வாதம் மற்றும் காமாலை நோய்களுக்கு வெல்லத்தை அனுபானமாகச் செய்து தரலாம். இந்த வெல்லத்தில் சமையலில் பயன்படுத்தும் போது சுவை அதிகரிக்கும். குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள். வெல்லத்தில் நீர்ப்புத் தன்மை இருப்பதால் இதை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடல் சமச்சீர் அடைந்துவிடும். ஹோட்டலில் அடிக்கடி சாப்பிடுவதால் சிலருக்கு அடிக்கடி வயிறு வலி ஏற்படும். மலம் சரிவர கழியாது. ஓமம், மிளகு வெல்லம் மூன்றையும் சம அளவில் (50 கிராம்) எடுத்து பொடி செய்து காலை மற்றும் இரவு அரை தேக்கரண்டி சாப்பிட்டால் சூட்டினால் வரக்கூடிய வயிற்றுவலி குறையும்.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் வரக்கூடிய குடம் புழுக்களை கட்டுப்படுத்த அதிகாலையில் வெல்லத்தை சிறிது அளவு உட்கொண்டால் போதும்.

அனீமியாவுக்கு இரும்புச் சத்தும் புரத உணவும் சேர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டும். அந்தந்த சத்துணவை தனித்தனியாக சாப்பிடுவதால் பெரியதாக பலன் எதுவும் இருக்காது. தேவைக்கேற்றபடி கலந்து சாப்பிட்டு வந்தால் கைம்மேல் பலன் கிடைக்கும் வெல்லத்தை வெல்கம் செய்து அனிமியாவுக்கு குட்பை சொல்வோம்.

# நோயற்ற வாழ்விற்கு இயற்கையுடன் உணவுப் பழக்கவழக்கங்களை கடைப்பிடியுங்கள்



பண்டைக்கால மக்கள் இயற்கையான முறையில் உணவுப் பழக்க வழக்கங்களை கடைப்பிடித்து நோய் நொடிகளின்றி ஆரோக்கியமானதொரு வாழ்வை வாழ்ந்து வந்தார்கள். ஆனால் இன்று தாயின் கருப்பையிலிருந்து பிரசவிக்கும் குழந்தை முதல் பெரியோர்கள் வரை நோயெனக் கூறிக்கொண்டு வைத்தியசாலையில் நிற்பதை காணக்கூடியதாகவுள்ளது.

இதற்கு முக்கிய காரணம் நாம் தற்போது கைக்கொண்டு வரும் உணவுப் பழக்க வழக்கங்களே ஆகும். ஆம் இன்றைய விஞ்ஞான யுகத்தின் வளர்ச்சிக்கேற்பவும் நேரம் வெகுவாக ஓடிக்கொண்டிருப்பதாலும் அன்றைய காலத்தவர்கள் கடைப்பிடித்த உணவுப் பழக்கம் போன்று இப்போது கடைப்பிடிக்க முடிவதில்லை.

தற்போது வீட்டில் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களை விட கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வரும் உணவுப் பொருட்கள், குளிர்பானங்கள் ஆகியவற்றையே மக்கள் பெரிதும் விரும்புகின்றனர். இவ்வாறு தயாரிக்கப்படும் உணவு பொருட்களில் அளவுக்கதிகமான நிறமூட்டும் இரசாயனப் பதார்த்தங்கள் உணவு பழுதடையாமல் சேர்க்கப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் எமது உடலில் உட்புகுந்து கொஞ்சம் கொஞ்சமாக நோய்த் தாக்கத்தையே உண்டு பண்ணி வருகின்றன.

இவ்வாறு நிறமூட்டும் இராசயன பதார்த்தங்கள் உணவு பழுதடையாமல் சேர்க்கப்படும் இரசாயனப் பதார்த்தங்கள் ஆகியவற்றால் புற்றுநோய், சிறுநீரகக் கோளாறு, சலரோகம், கொலஸ்ரோல் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. எனவே, இவ்வாறான உணவுப் பொருட்களை தவிர்த்து ஓரளவுக்கேனும் இயற்கையுடன் ஒட்டியதான உணவுப் பொருட்களை உண்டு வாழ்ந்தால் நோயற்ற வாழ்வை வாழலாம்.

"நோயற்ற வாழ்வே எமக்கு பெருஞ்செல்வம்"

# தேநீர் மாரடைப்பை தடுக்கும்

## புதிய ஆய்வில் தகவல்



நீங்கள் தேநீர் விரும்பிகளா? அப்படியாயின் உங்களை மாரடைப்பு தாக்குவதற்கான வாய்ப்பு குறைவு. தேநீரானது மாரடைப்பு ஏற்படுவதை தடுக்கின்றது என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

எம்மில் அநேகமானவர்கள் தேநீர் பிரியர்கள். சிலருக்கு காலையில் எழுந்தவுடனே தேநீர் வேண்டும். இல்லையென்றால் அன்றைய பொழுதே மந்தமாக உள்ளதாக கூறுவார்கள். சிலருக்கு தேநீர் உற்சாகப் பானமாகவும் உள்ளது.

சிலர் அலுவலகங்களில் பகல் உணவை வயிறு நிறைய உண்டு விட்டு நித்திரையில் கண்ணயர்ந்து போவார்கள். அவர்கள் தேநீரின் மணத்தை நுகர்ந்தால் போதும், நித்திரை பறந்துவிட, ஓடிச்சென்று தேநீரை எடுத்து வந்து அருந்துவார்கள். பின்னர் அவர்களது இயக்கமே மின்னல் வேகமாக இருக்கும்.

உண்மையில் தேநீர் ஓர் உற்சாக பானம்தான். அதைவிட இப்போது தேநீர் மாரடைப்பு ஏற்படுவதை தடுக்கும் மருத்துவப் பானமாகவும் உள்ளது என அவுஸ்ரேலிய ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். தொடர்ச்சியாக தினமும் 3 கோப்பை கறுப்பு தேநீர் அல்லது பச்சை தேநீர் (கிறீன் ரீ) அருந்தினால் இதயப் பிரச்சினைகள் 11 சதவீதம் குறையும் என மேற்கு அவுஸ்ரேலியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள்.

தேநீரிலுள்ள Flavonoids எனும் பொருள், இரத்தக் கொழுப்பு மற்றும் கொலஸ்ட்ரோல் மூலம் ஏற்படும் ஒருவகைக் கற்களை தடுக்கிறது எனக் கண்டறியப்பட்டுள்ளது. ஒரு கப் தேநீரில் 150-200 மில்லி கிராம் Flavonoids உள்ளது "அன்ரி ஒக்ஸ்டன்டஸ்களை" பொறுத்தளவில் இரு கோப்பை தேநீர் 5 மரக்கறிகளுக்கு அல்லது இரு அப்பிள்களுக்கு சமமானது என இந்த ஆய்வு கூறுகிறது.

தேயிலை ஆலோசனை சபையைச் சேர்ந்த டாக்டர் கத்தரின் தேநீரில் பாலை சேர்த்து அருந்தினாலும் மேற்படி நன்மைகள் கிடைக்கும் எனத் தெரிவித்துள்ளனர்.

# உலகின் மிகப்பெரிய சமாதான புறா





1.2 மில்லியன் பொத்தன்களை கொண்டு உலகின் மிகப் பெரிய சமாதான புறா துபாய் நாட்டில் வடிவமைக்கப்பட்டது. உலகின் மிகப்பெரிய சமாதான புறா இக்கொடியானது ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தின் கொடியில் உள்ள நிறங்களை கொண்டு வடிவமைக்கப்பட்டது.

19 x 9 மீட்டர் அளவில் வடிவமைக்கப்பட்ட இந்த சமாதான புறா பூஜிப் கலிஃபா வளாகத்தில் பறக்கவிடப்பட்டது. கடந்த சித்திரை மாதம் 23-24ஆம் திகதிகளில் நடைபெற்ற முதலாவது சமாதான மற்றும் விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு விழா ஏற்பாட்டுக் குழு இப் பிரமாண்ட சமாதான புறா அடங்கிய கொடியை இவ்விடத்தில் பறக்கவிட்டது.

இச் சமாதான புறாவை ஈராக்கின் சிறந்த விளையாட்டு வீரரான பரீட் லப்டா (வயது 33) என்பவரே வடிவமைத்துள்ளார். நல்லெண்ணத்தை துவரும் சமாதான பிரசாரருமான பரீத் துபாயிலுள்ள பாடசாலை சிறுவர்களை இணைத்துக் கொண்டு இப்புறாவை வடிவமைத்தார்.

இதனை முற்று முழுதாக வடிவமைப்பதற்கு 7 நாட்கள் சென்றுள்ளன. விளையாட்டு மற்றும் சமாதான நிகழ்வு நடைபெறும் தினத்தில் இப்புறாவிற்கான கின்னஸ் சான்றிதழ் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

## 1ம் பக்கம் - அடுத்த மூன்று ஆண்டுகள்

"தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் கடவுளைக் காண்பர்" (மத் 5:8), 2016ஆம் ஆண்டு போலந்தின் கிராக்கோவில் சிறப்பிக்கப்படும் 31வது உலக இளையோர் தினத்துக்கு "இரக்கமுடையோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் இரக்கம் பெறுவர்" (மத் 5:7) என்பதும் தலைப்புகளாக அறிவிக்கப்பட்டுள்ளன.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டு 25ஆம் திகதியன்று ரியோ தெ ஜெனெய்ரோவின் புனித செபஸ்தியார் பேராலயத்தில் இளையோரைச் சந்தித்தபோது இயேசுவின் மலைப்பொழிவு போதகத்தில் கூறிய நற்பேறுபெற்றோர் பகுதியை உள்ளார்ந்து வாசித்து செயல்படுத்துமாறு கேட்டுக்கொண்டார்.

# உடல் நலம் காப்போம்!

- கொதிக்க வைத்து இறக்கிய தண்ணீரில் இரண்டு கரண்டி (கலப்படமில்லாத) கோப்பித்தூளைப் போட்டு ஆவிப்பிடித்தால் தலை வலி குணமாகும்.
- ஒரு டம்ளர் மோரில் இரண்டு ஸ்பூன் கறி வேப்பிலைச் சாறு கலந்து குடித்தால் அஜீரம் நீங்கும்.
- தினமும் ஒரு ஸ்பூன் தேன் சாப்பிட்டால் உடல் பலம் பெறும்.
- சவ்வரிசியை வேக வைத்து மோரில் கரைத்து, உப்பு போட்டு சாப்பிட்டால் வயிற்றுப்போக்கு குணமாகும்.
- பால் கலக்காத தேனீரில் தேன் விட்டுக் குடித்தால் தொண்டைக்கட்டு குணமாகும்.
- தேங்காய் எண்ணெய்யை காய்ச்சி அதில் கறிவேப்பிலை போட்டு வேகவைக்கவும். இந்த எண்ணெய்யை தினசரி தலைக்கு தேய்த்து வர கூந்தல் இயற்கை நிறத்திற்கு மாறும். உணவில் அதிகளவு கறிவேப்பிலையை சேர்த்துக்கொள்ள வேண்டும். இது பித்தத்தை குறைக்கும். அதேபோல் மூசு முசுக்கை இலையின் சாறு எடுத்து சம அளவு நல்லெண்ணெய் சேர்த்து காய்ச்சி வைத்துக்கொண்டு வாரம் ஒருமுறை அந்த எண்ணெய்யைத் தேய்த்து குளித்து வந்தால் இளநரை படிப்படியாக மாறுவதை காணலாம்.
- வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி பனங்கற்கண்டு சேர்த்து வதக்கி காலையில் வெறும் வயிற்றில் சாப்பிட்டு வந்தால் நரம்புத்தளர்ச்சி குணமாகும்.
- சுக்கைத் தூளாக்கி எலுமிச்சை சாற்றில் கலந்து சாப்பிட்டால் பித்தம் குறையும்
- மிளகுத் தூளுடன் நெய், வெல்லம் கலந்து சாப்பிட்டால் தொண்டைப்புண் குணமாகும்.

# நத்தார் சிறப்பிதழை உங்கள் ஆக்கங்களால் அலங்கரியுங்கள்

எமது பத்திரிகையின் "நத்தார் சிறப்பிதழை" உங்கள் ஆக்கங்களான கட்டுரை, சிறுகதைகள் கவிதைகள் மற்றும் நத்தார் பற்றிய சிறப்புத் தகவல்கள் ஆகியற்றினால் அலங்கரிக்க இதோ உங்களுக்கோர் சந்தர்ப்பம்

எனவே உங்கள் கலைத் திறமைகளையும், தகவல்களையும் எமக்கு 25.11.2013க்கு முன்னதாக அனுப்பிவையுங்கள்.

சிறந்த ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு நத்தார் சிறப்பிதழில் வெளியிடப்படும்



ஆசிரியர்
ஞான ஒளி
"நத்தார் சிறப்பிதழ்"
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
பொரள்ளை, கொழும்பு – 08

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

## விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | 1 ½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா | | |
| ¼ பக்கம் | 7750/= | 7000/= |
| ½ பக்கம் | 15500/= | 14000/= |
| முழுப்பக்கம் | 31000/= | 28000/= |
| வர்த்தக விளம்பரம் | | |
| ¼ பக்கம் | 11500/= | 10000/= |
| ½ பக்கம் | 23000/= | 20000= |
| முழுப்பக்கம் | 46000/= | 40000/= |

வர்ணம் + 25 %

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) | | |
| ¼ பக்கம் | 7750/= | 7000/= |
| ½ பக்கம் | 15500/= | 14000/= |
| முழுப்பக்கம் | 31000/= | 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) | | |
| ¼ பக்கம் | 11500/= | 10000/= |
| ½ பக்கம் | 23000/= | 20000= |
| முழுப்பக்கம் | 46000/= | 40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்களுக்கும்
ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.

## உங்களுக்கான பல விசேட சேவைகள்!



### கொழும்பு கத்தோலிக்க அச்சகம்

ஞான ஒளி பத்திரிகையின்
விளம்பரங்களுக்கான விலைப்பட்டியல்

| | 1 ½" x 1" single | 3" x 1"Double | 5" x 1" Trible |
|---|---|---|---|
| 1" | 350/= | 700/= | 1050/= |
| 1½" | 525/= | 1050/= | 1575/= |
| 2" | 700/= | 1400/= | 2100/= |
| 2½" | 875/= | 1750/= | 2625/= |
| 3" | 1050/= | 2100/= | 3150/= |
| 3½" | 1225/= | 2450/= | 3675/= |
| 4" | 1400/= | 2800/= | 4200/= |
| 4½" | 1575/= | 3150/= | 4725/= |
| 5" | 1750/= | 3500/= | 5250/= |
| 5½" | 1925/= | 3850/= | 5775/= |
| 6" | 2100/= | 4200/= | 6300/= |

| | பின் பக்கம் | உற்பக்கம் |
|---|---|---|
| ஆலயத் திருவிழா (திருத்தப்பட்டுள்ளது) | | |
| ¼ பக்கம் | 7750/= | 7000/= |
| ½ பக்கம் | 15500/= | 14000/= |
| முழுப்பக்கம் | 31000/= | 28000/= |
| வர்த்தக விளம்பரம் (திருத்தப்பட்டுள்ளது) | | |
| ¼ பக்கம் | 11500/= | 10000/= |
| ½ பக்கம் | 23000/= | 20000= |
| முழுப்பக்கம் | 46000/= | 40000/= |

வர்ணம் + 25 %

திருமண சேவைகளுக்கு
1 தொடக்கம் 15 சொற்கள் வரை
ரூபா 500.00உம் தொடர்ந்து வரும் ஒவ்வொரு
சொற்களுக்கும் ரூபா 8.00 வீதமும் அறவிடப்படும்.

### தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை கொழும்பு - 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் - 0112692586
E-mail : colombocp@sltnet.lk
www.colombocatholicpress.com




அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை பீ.சீ.ஜீ எட்ரிச் றொட்ரிக்கோ, இயக்குனர், கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்